உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

விலை 30/=

சிவம் - 02 | விகாரி வருடம் ஆனித் திங்கள் 16ஆம் நாள் 01 ஜூலை 2019 | பூமி - 05

## சிவபூமி அறக்கட்டளையின் சேவை கிழக்கிலங்கையிலும் ஆரம்பம்

சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் கிழக்கிலங்கையிலும் தனது பணிகளை ஆரம்பித்துள்ளது. இந்த வகையில் திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய நிர்வாக சபையுடன் இணைந்து உருவாக்கப்பட்ட சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலையும் சிவபூமி யாத்திரிகர் விடுதியும் இம் மாதம் 14ஆம் திகதியன்று காலை 10.00 மணிக்கு சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர் களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது. இந்த வைபவத்தில் பல ஆன்மிகப் பெரியவர்களும், கிழக்கிலங்கையில் உள்ள சைவ நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

திருக்கோணேஸ்வரம் ஆலயத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் தங்குவதற்கு வசதியாக நவீன வசதிகளுடனான ஆறு அறைகளைக் கொண்ட யாத்திரிகர் விடுதி மேல் மாடியிலும், திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மனவளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கான பாடசாலை கீழ் தளத்தில் அமைய இருக்கிறது.


ஒரு கோடி ரூபாவுக்கும் மேலான செலவுடன் மேற்கொள்ளப் பட்டிருக்கும் இந்தப் பாரிய பணியை சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் நிறைவேற்றி இருக்கிறது.




திருக்கோணேஸ்வரம் ஆலய நிர்வாக சபை கட்டடத்தை அமைப்பதற்கான நிலத்தை வழங்கியிருப்பதோடு, மனவிருத்திப் பாடசாலை மற்றும் யாத்திரிகர் விடுதி என்பவற்றின் நிர்வாகப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.




**திருவாசக விழாவில் (12.07.2019) கலந்துகொள்ள யாழ்.வருகைதரும் இவர்கள்**



தமிழ்நாடு
திருமுருகன்பூண்டி
திருமுருகநாதசுவாமி
திருமடம்
முதல்வர் தவத்திரு
சுந்தரதாச அடிகளார்
சிறப்புரை ஆற்றுவார்.



தமிழ்நாடு
புகழ்பூத்த ஓதுவார்
திருமுறைக்கலாநிதி
திருத்தணி என்.சுவாமிநாதன்
அவர்கள்
திருவாசக கச்சேரி
நிகழ்த்துவார்.

மின்னஞ்சல் - sivapoomiprinters@gmail.com
தொலைபேசி - 021 222 7938

## திருவாசக விழாவில் கலந்து கொள்வதற்கு யாழ்.வருகிறார்



திருவாசக அரண்மனை அமைப்பதற்கு பேருதவி புரிந்த அவுஸ்திரேலியா. சிட்னி பிரபல இதய வைத்திய நிபுணர் வைத்தியகலாநிதி வ.மனோமோகன் அவர்களும். அவரது பாரியார் வைத்தியகலாநிதி சிவகௌரி மனோமோகன் அவர்களும் யாழ்ப்பாணம் வருகை தருகிறார்கள். திருவாசக விழாவில் வைத்தியகலாநிதி வ.மனோமோகன் அவர்கள் வாழ்த்துரை வழங்கவிருக்கிறார்.

## கம்போடியா அங்கோர் தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா அண்மையில் சிறப்பாக நடந்தேறியது.

அங்கோர் தமிழ் சங்கம்
கம்போடியா



## சிவபூமி வாழ்த்துகிறது!




மூத்த ஊடகவியலாளரும். யாழ். இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த விளையாட்டு வீரருமான திரு.ந.வித்தியாதரன் அவர்களது அகவை அறுபது நிறைவையொட்டி சிவபூமி செய்திப் பத்திரிகை இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



நாயுடன் நாகம் போரிடும் நேரம்

## யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா





சிவபூமி
சிவம் - 02 01 ஜூலை 2019 பூமி - 05
சிந்தனை செய்வோம்

# திருக்கேதீஸ்வர வரவேற்பு வளைவு பிரச்சனை தீர்க்கப்பட வேண்டும்

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குச் செல்லும் வீதியில் அலங்கார வரவேற்பு வளைவு அமைப்பது தொடர்பாக கடந்த மாசி மாதம் தொடக்கம் பலவித இடையூறுகள் தொடர்ந்து கொண்டு இருப்பது வேதனைக்குரிய விடயமாகும். இதிகாசகால வரலாற்றைக் கொண்ட திருக்கேதீஸ்வரம் இந்த மண்ணின் வரலாற்றை எடுத்துச் சொல்லும் உன்னத பொக்கிஷமாகும். 1505 ஆம் ஆண்டு அந்நியர்கள் வருவதற்கு முன்னர் தமிழ் வேந்தர்களால் கட்டிக் காப்பாற்றப்பட்ட திருக்கேதீஸ்வரத்தை பௌத்தர்களும் வழிபாடு செய்து வந்துள்ளனர். அந்நியர்கள் இம் மண்ணின் செல்வத்தை உறிஞ்சி வந்த வேளையில், திருக்கோவில்களை நிர்மூலமாக்கி,கோவில் உடமைகளை கொள்ளை அடித்துச் சென்ற வரலாறு பல மொழிகளிலும் ஆவணமாக வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

அந்நியர்களால் கொண்டு வரப்பட்ட அவர்களின் மதம் எங்கள் மக்களுள் ஒருசிறு பகுதியினரிடம் போய்ச்சேர்ந்தது. இன்று தமிழர்களிலும் சரி, சிங்களவர்களிலும் சரி அந்நிய மதத்துக்கு மாறியவர்களின் முன்சந்ததி சுதேசிய சமயங்களைச் சேர்ந்தவர்களே ஆகும். வறுமை, கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றுக்காக அன்றைய காலப் பகுதியில் மதம் மாற வேண்டிய சூழ்நிலை உருவானது. மதம் மாறியவர்கள் நீண்ட காலத்திற்குப் பின்பும் தங்கள் பூர்வீக மதத்தை மதித்தனர்.

ஆனால், இன்று மன்னார் மாதோட்டத்தில் தொடர்ந்து இடம்பெறும் திருக்கேதீஸ்வரத்துக்கு எதிரான சம்பவம் மிகவும் கவலைக்குரியது. இதுவிடயம் தொடர்பாக பலரும் வேண்டுகோள்களை விடுத்தனர். யாழ். மாவட்டத்தினதும், மன்னார் மாவட்டத் தினதும் கிறிஸ்தவ மதத் தலைவர் களுக்கு இந்தப் பிரச்சினையை சுமுகமாகத் தீர்த்து வைக்குமாறு பலரும் மிகப் பணிவான வேண்டு கோள்களை விடுத்து வந்தனர்.

திருக்கேதீஸ்வரத் திருத்தலம் அமைந்த பகுதிக்குரிய பிரதேச சபை நிரந்தர வரவேற்பு வளைவு அமைப்பதற்கு அண்மையில் அனுமதி வழங்கியிருந்தது. இந்த அனுமதியை வழங்கியிருந்த பிரதேசசபை தலைவரை, வளைவு அமைப்பதற்கு எதிரான குழுவினர் மேற்படி அனுமதியை ரத்துச் செய்யுமாறு கேட்டுக்கொண்டதன் விளைவாக, குறிப்பிட்ட அனுமதி மீளப்பெறப்பட்டு விட்டது. இது சாதாரண விடயமல்ல. இந்து – கத்தோலிக்க நல்லுறவை மிகவும் பாதிக்கக்கூடிய விடயமாகும். இதுவிடயம் தொடர்பாக கத்தோலிக்க மதத் தலைவர்கள் மிகவும் விழிப்பாக செயற்பட வேண்டும்.

மன்னாரில் ஏற்படும் பிரச்சினை எதிர்காலத்தில் இந்து – கத்தோலிக்க உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்துமானால், அது தமிழ் இனத்திற்கே பாதகமாக அமையலாம். இதுவிடயம் தொடர்பாக கத்தோலிக்க மதகுருமார் பெருந்தன்மையோடு திருக்கேதீஸ்வர வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டும் என அனைவரும் எதிர்பார்க்கிறார்கள்.

## இம்மாத (ஜூலை) சிறப்புத் தினங்கள்

| | | |
|---|---|---|
| 02 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| 06 | சனி | சதுர்த்தி விரதம் |
| 07 | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் (இரவு) |
| 08 | திங்கள் | ஆனி உத்தரம் |
| 12 | வெள்ளி | சயன ஏகாதசி விரதம் |
| 14 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| 16 | செவ்வாய் | பூரணை விரதம் |
| 20 | சனி | சங்கடஹர சதுர்த்தி |
| 26 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| 28 | ஞாயிறு | ஏகாதசி விரதம் |
| 29 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| 31 | புதன் | ஆடி அமாவாசை விரதம் |

## நாவற்குழி சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் முதலாவது ஆண்டு கும்பாபிஷேக தினம்


நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை வளாகத்தில் உள்ள சிவதெட்சணாமூர்த்தி திருக்கோவில் கும்பாபிஷேகப் பெருவிழாவின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டிய சிறப்புப் பூசை வழிபாடுகள் இம்மாதம் 12ஆம் 13ஆம் திகதிகளில் நடைபெற இருக்கின்றன.

12.07.2019 வெள்ளிக்கிழமை மாலை பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும். மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.00 மணிமுதல் திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப் பட்டிருக்கும் 108 சிவலிங்கங்களுக்கு விசேட பாற்குட அபிஷேகமும், மூல மூர்த்தியாக எழுந்தருளியிருக்கும் சிவதெட்சணாமூர்த்தி பெருமானுக்கு 1008 சங்காபிஷேகமும், தொடர்ந்து சிறப்புப் பூசை வழிபாடுகளும் இடம்பெற இருக்கின்றன. இதன்பின் அன்னதானமும் இடம்பெறும்.

## துர்க்காதேவி மகோற்சவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. செப்ரெம்பர் 10ஆம் திகதி இரதோற்சவமும், 11ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

## நாவற்குழி திருவாசக அரண்மனையில் திருவாசக விழா



நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி திருவாசக அரண்மனையின் ஓராண்டு நிறைவையொட்டிய சிறப்பு நிகழ்வாக திருவாசக விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் 12ஆம் திகதியன்று பிற்பகல் 4.00 மணி முதல் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் விழா நடைபெறும்.

மேற்படி நிகழ்வின்போது நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் ஆசியுரையும், அவுஸ்திரேலியா வைத்திய நிபுணர் வ.மனோமோகன் அவர்களும், பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் வழங்கும் வாழ்த்துரைகளும், இந்தியாவிலிருந்து வருகைதரும் தமிழ்நாடு திருமுருகன்பூண்டி திருமுருகநாதசுவாமி திருமடம் முதல்வர் தவத்திரு சுந்தரதாச அடிகளார் ஆற்றும் சிறப்புரையும், மூத்த ஓதுவார் திருமுறைக் கலாநிதி திருத்தணி என்.சுவாமிநாதன் அவர்கள் வழங்கும் திருவாசகம் சிறப்பு அரங்கும், பொன்னாலை சந்திரபரத கலாலய மாணவர்களது 'கூத்தன் இவ்வானும் குவலயமும்' எனும் பொருளிலான பரத நாட்டிய அரங்கும் இடம்பெறவிருக்கின்றன.

## யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறை தகவல் நிலையம்

வடமாகாணத்தின் சுற்றுலாத்துறையை விருத்தி செய்யும் நோக்கமாக தகவல் நிலையமொன்று கடந்த மாதம் (ஜூன்) 21 ஆம் திகதியன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறையை மீண்டும் எழுச்சிபெறச் செய்யும் வகையில் வடமாகாணத்தில் சுற்றுலா தொடர்பான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில், அதன் ஒரு பகுதியாக வடக்கு மாகாண சுற்றுலாத் துறையின் ஏற்பாட்டில் மேற்படி தகவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி, இறுவட்டு ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ள சுற்றுலா தளங்கள் தொடர்பான காட்சிகள் கொண்டதாக இந்த இறுவட்டு அமைந்துள்ளது. யாழ். புகையிரத நிலைய வளாகத்தில் இந்த தகவல் நிலையம் இயங்கி வருகிறது.

## திருமுறைக் கலாநிதி திருத்தணி என்.சுவாமிநாதன் யாழ். வருகிறார்


நாவற்குழியில் அமைந்துள்ள திருவாசக அரண்மனையின் முதலாவது ஆண்டு நிறைவையொட்டி, இம்மாதம் 12ஆம் திகதி நடைபெறவிருக்கும் திருவாசக விழாவின்போது திருவாசகக் கச்சேரியை நிகழ்த்துவதற்காக இந்தியாவின் புகழ்பூத்த ஓதுவார் திருமுறைக் கலாநிதி திருத்தணி என்.சுவாமிநாதன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவிருக்கிறார்.

## சிவபூமி நாய்கள் சரணாலயம் பொதுமக்கள் பார்வையிடும் நேரம்

பளை, இயக்கச்சியில் அமைக்கப்பட்டிருக்கும் நாய்கள் சரணாலயத்தை தினமும் காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை பொதுமக்கள் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு அனுமதியின்றி நாய்க்குட்டிகளை கொண்டுவந்து விடவேண்டாம் என்றும், தடுப்பூசி ஏற்றிய பின்னர் அதற்கான சான்றுப் பத்திரத்துடன் நாய்களை ஒப்படைக்கலாம் எனவும் சிவபூமி அறக்கட்டளையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நயினை நாகபூஷணி மகோற்சவம்




வரலாற்றுப் பெருமைவாய்ந்த நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் (ஜூலை) 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ஜூலை 11ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும், 14ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 15ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் 16ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். 17 ஆம் திகதி நடைபெறும் தெப்பத் திருவிழாவுடன் வருடாந்த மகோற்சவம் நிறைவுபெறும்.

1960ஆம் ஆண்டில் ஆலயத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அமுதசுரபி அன்னதான சபை, இவ்வருடம் தனது பணியில் அறுபதாவது ஆண்டில் காலடி வைப்பது சிறப்புக்குரிய செய்தியாகும்.

## திருக்கோவில் திருவிழாக்கள்


### சிதம்பரம் அருள்மிகு ஆனந்த நடராஜமூர்த்தி திருக்கோயில்



சிதம்பரம் அருள்மிகு சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ ஆனந்த நடராஜமூர்த்தி திருக்கோயில் மகோற்சவப் பெருவிழா கடந்த மாதம் (ஜூன்) 29ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இம்மாதம் (ஜூலை) 7ஆம் திகதியன்று இரதோற்சவமும், மறுநாள் 8ஆம் திகதியன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறவிருக்கின்றன.

### நல்லூர் கந்தசுவாமி மகோற்சவம்




வரலாற்றுப் பெருமைவாய்ந்த நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

**முக்கிய உற்சவங்களின் விபரம் :**

| | | |
|---|---|---|
| 15.08.2019 (மாலை) | : | மஞ்சம் |
| 22.08.2019 (மாலை) | : | அருணகிரிநாதர் உற்சவம் |
| 23.08.2019 (மாலை) | : | கார்த்திகை உற்சவம் |
| 24.08.2019 (காலை) | : | சூர்யோற்சவம் |
| 25.08.2019 (காலை) | : | சந்தான கோபாலர் உற்சவம் |
| 25.08.2019 (மாலை) | : | கைலாச வாகனம் |
| 26.08.2019 (காலை) | : | கஜவல்லி மஹாவல்லி உற்சவம் |
| 26.08.2019 (மாலை) | : | வேல்விமானம் |
| 27.08.2019 (காலை) | : | தெண்டாயுதபாணி உற்சவம் |
| 28.08.2019 (மாலை) | : | சப்பரம் |
| 29.08.2019 (காலை) | : | இரதோற்சவம் |
| 30.08.2019 (காலை) | : | தீர்த்தோற்சவம் |
| 31.08.2019 (மாலை) | : | பூங்காவனம் |

### மாவைக் கந்தன் காம்யோற்சவப் பெருவிழா – 2019




வரலாற்றுப் பெருமை வாய்ந்த மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய காம்யோற்சவப் பெருவிழா இம்மாதம் (ஜூலை) 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று ஆரம்பமாகின்றது. ஜூலை 27ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு திருக்கார்த்திகை உற்சவமும், 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் 31ஆம் திகதி ஆடி அமாவாசை நாளன்று தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருக்கிறது.

வழமைபோல இவ்வருடமும் கீரிமலை கண்டகி தீர்த்தக் கேணியில் தீர்த்தத் திருவிழா நடைபெறும். மாவை ஆலயத்தில் அதிகாலை 5.00 மணிக்கு இடம்பெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து, 5.30 மணிக்கு முருகப் பெருமான் கீரிமலைக்கு எழுந்தருளுவார். காலை 6.00 மணிக்கு கீரிமலை கண்டகி தீர்த்தக் கேணியில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். அன்றையதினம் மாலை 6.00 மணிக்கு முருகப் பெருமான் கீரிமலையிலிருந்து மாவை ஆலயத்திற்கு புறப்படும் நிகழ்வு இடம்பெறும்.

உற்சவகால சிறப்பு நிகழ்வாக தினமும் காலை 9.00 மணிக்கு மாவை ஆலய ஆஸ்தான வித்துவான் கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் 'திருமுருகன் பெருமை' எனும் பொருளிலான தொடர் கதாப்பிரசங்கம் இடம்பெறும்.

### செல்வச்சந்நிதி மகோற்சவம்



வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் 30ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. செப்ரெம்பர் 12ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 13ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 14ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## சிவத்தமிழ்ச்செல்வியின் குருபூசை



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தி தலைவர் சிவத்தமிழ்ச் செல்வி கலாநி அப்பாக்குட்டி அவர்களின் பதினொரா வைபவம் இம்மாதம் (ஜூலை) 12 வெள்ளிக்கிழமை தேவஸ்தானத் தலை ஆறு.திருமுருகன் தலைமையில் இருக்கிறது. காலை 9.00 மணியளவில் அம்மையாரின் நினைவாலயத்தில் வேதபாராயணமும் உருவச்சிலை வழிபாடும், தொடர்ந்து அன்னபூரணி மண்டபத்தில் குருபூசை சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த வைபவத்தில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ செந்தில்ராஜக் குருக்கள், மருதனார்மடம் ஸ்ரீ சுந்தரேசர் ஆஞ்சநேயர் ஆலய அறங்காவலர் சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆகியோர் ஆசியுரைகளை வழங்கவிருப்பதுடன், அவுஸ்திரேலியா இதய வைத்திய நிபுணர் வ.மனோமோகன் அவர்களும், வலி வடக்கு பிரதேச செயலர் திரு.சி.சிவஸ்ரீ அவர்களும் சிறப்புரைகளை ஆற்றுவார்கள்.

இந்த நிகழ்வின்போது மூத்த சிவாச்சாரியார்கள் நால்வர் கௌரவம் பெறுகிறார்கள். திருநெல்வேலி மகேஸ்வரக்குருக்கள் பாலச்சந்திரன், மட்டுவில் கிருஷ்ணசாமிக் குருக்கள் சதாசிவக் குருக்கள், குப்பிளான் சிவஸ்ரீ சிவசாமிக்குருக்கள் குமாரராஜக் குருக்கள், சுழிபுரம் பறாளை பிரமஸ்ரீ முத்துச்சாமி ஐயர் பாலகுருசாமி சர்மா ஆகியோர் எம்மண்ணில் ஆற்றிய சிவாச்சாரிய பணியைப் போற்றும் வகையில் பொற்கிழி வழங்கி கௌரவிக்கப்படவிருக்கிறார்கள்.

## ஊரெழு மனோன்மணி அம்பாள்

ஊரெழு கிளானைப்பதி பர்வதவர்த்தனி என வழங்கும் மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் (ஜூலை) 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ஆகஸ்ட் 2ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 3ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## ஆசிமடம் அரசடி விநாயகர்

கோண்டாவில் ஆசிமடம் அரசடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த மாதம் (ஜூன்) 29ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 6ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், 7ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 8ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## தொல்புரம் வழக்கம்பரை அம்பாள்

தொல்புரம் வழக்கம்பரை மகாமாரி அம்பாள் வருடாந்த மகோற்சவம் இம்மாதம் (ஜூலை) 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 15ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 16ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலயம்

நவாலி அட்டகிரி கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இம்மாதம் (ஜூலை) 6ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 15ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் 16ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## வண்ணை வீரமாகாளி அம்மன்

வண்ணை அருள்மிகு வீரமாகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த ஜூன் மாதம் 22ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இம்மாதம் 15ஆம் திகதியன்று இரதோற்சவமும், மறுநாள் 16ஆம் திகதியன்று தீர்த்தோற்சவமும் 17ஆம் திகதியன்று பூங்காவன உற்சவமும் இடம்பெற இருக்கின்றன.

இம்மாதம் 18ஆம் திகதியன்று மாலை அம்பாளின் கிராமவலம் இடம்பெறும். அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எழுந்தருளிவரும் அருள்மிகு வீரமாகாளி அம்மன், பருத்தித்துறை வீதி, கோவில் வீதி, நாவலர்வீதி வழியாக பலாலி வீதிக்கு வந்து, தொடர்ந்து அம்மன் வீதிவழியாக திரும்பி ஆலயத்தை சென்றடைவார்.

## இம் மாதத்தில் சந்திர கிரகணம்

இம்மாதம் (ஜூலை) 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பின்னிரவு பார்சுவ சந்திர கிரகணம் நிகழுகிறது. இதனை இலங்கையிலுள்ள அனைவரும் பார்க்க முடியும். இலங்கையில் மட்டுமல்ல இந்தியா, மலேசியா, மொறிசியஸ், தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளிலும் இந்த சந்திர கிரகணம் தோற்றமளிக்கும்.

இலங்கையில் பின்னிரவு 1மணி 33 நிமிடத்தில் ஆரம்பமாகும் சந்திர கிரகணம் 3மணி 01 நிமிடத்தில் மத்திம நிலைக்கு வந்து, பின்னிரவு 4மணி 30 நிமிடத்தில் நிறைவுபெறும் என பஞ்சாங்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

08.07.2019

# நடராஜப் பெருமானுக்குரிய பெருவிழாவாக சிறப்புப்பெறும் ஆனி உத்தரம்

பேராசிரியர் கனகசபாபதி நாகேஸ்வரன்

ஆனி உத்தரம் ஆடல் வல்லானாகிய ஸ்ரீ நடராஜப் பெருமானின் விசேட அபிஷேகத் தினங்களுள் ஒன்றாகும். சிவனுக்குத் தீர்த்தன் என்ற பெயரை மாணிக்கவாசக சுவாமிகள் "தீர்த்தன் நற்றில்லை சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன்'' என்ற திருவெம்பாவை வரிகளிலே சுட்டியுரைத்துள்ளார்.

ஆடல் வல்லானின் அபிஷேகங்கள் ஆறு. மார்கழி மாதத்திலே நிகழும் ஆருத்ரா தரிசனம் வைகறை வழிபாடாக அமைகின்றது. மாசி மாத பூர்வபட்ச சதுர்த்தசியில் வருவது மத்தியான அபிஷேகமாக உள்ளது. சித்திரை மாதத்துத் திருவோண நட்சத்திர அபிஷேகம் உச்சிக்கால வழிபாடாகவும், ஆனி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் வருவது திருமஞ்சனத் திருநாளாகவும் அமைந்து மாலை வழிபாட்டு நாளாக மிளிர்கின்றது. ஆவணி மாதத்து பூர்வபட்ச சதுர்த்தசி அபிஷேகம் அர்த்தசாம வழிபாடாகவும் அமைகிறது. பூசைகள் எவ்வகையில் சிவாகம முறைகளுக்கு அமைய குறிப்பிட்ட நேரத்தில் நடைபெற வேண்டுமோ அதேபோன்றுதான் ஸ்ரீ நடராஜப் பெருமானின் அபிஷேக தரிசனமும் மிகமிக பக்திபூர்வமான வகையில் முக்கியம் வாய்ந்ததாகும். அம்பலத்தரசனின் ஆனந்த தாண்டவ அபிஷேக தரிசனம் கோடானகோடி புண்ணிய பலன்களைத் தரவல்லன.

அனவரத தாண்டவம், ஆனந்த தாண்டவம், சிவ தாண்டவம், சபாபதி தாண்டவம், காலைத்தூக்கி ஆடும் தெய்வத்தின் தரிசனம், கனகசபாபதிக்கு நமஸ்காரம் செய்வது என்பதெல்லாம் உலகை ஆடலால் இயக்கும் - பஞ்ச கிருத்தியமென்பது விஞ்ஞானப் பேருண்மை. 'மன்றுளாடும் மணி' என்பர் பெரியோர். அணுக் கொள்கையுடன் ஆராய்ச்சித் தொடர்புடையது சிவ தாண்டவம். நடராஜப் பெருமான் திருவுருவை வர்ணித்த அப்பர் சுவாமிகள், "குனித்த புருவம், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பு, பனித்த சடை, பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு, தூக்கிய திருவடி - எடுத்த பொற்பாதம் என இவற்றைக் காணப் பெறுவதற்கு மனிதப்பிறவி வேண்டும்" என்று பாடியுள்ளார்.

ஆடலரசனின் வலது கையில் உடுக்கை உள்ளது. இது தோற்றமாகிய படைத்தற்றொழிலைக் கூறிக்கொண்டுள்ளது. அபயகரம் அஞ்சேல் எனக கூறிய வண்ணம் காத்தற்றொழிலைச் செய்கிறது. திருக்கலத்திலுள்ள தீச்சுடரானது பஞ்ச பூதங்களினாலும் மும்மலங்களினாலும் எழும் தீயசக்திகளைப் பொசுக்கிச் சாம்பல் ஆக்கும் அழித்தற்றொழிலைச் செய்கிறது. ஊன்றிய திருவடியானது மறைத்தற்றொழிலைக் காட்டுகிறது. தூக்கிய திருவடியானது அருளற்றொழிலை எடுத்தியம்புகிறது. ஓம் என்னும் ஓங்காரப் பிரணவம் திருவாசியாக உள்ளது. திருவாசியின் தீச்சுடர் தீயவைகளை அழிக்கும் தத்துவத்தை எடுத்து விளக்கி நிற்கின்றது. சாந்த குணமும், மலர்ச்சியும் தவழும் முகமானது பெருங்கருணைப் பேராளனுக்கே உரியது எனப்படுகின்றது. ஞானச் சிறப்பையும், தவ ஒழுக்கச் சிறப்பையும் ஜடாமுடியில் காணலாம். சிவன் பேராற்றல் படைத்தவர் என்பதற்கு இலக்கணமாகக் கங்கை அவரின் திருவடியிலே உள்ளது. அஞ்சேல் என அபயமளித்துத் தம்மைச் சரண் அடைந்தவர்களை அரவணைக்கும் பெரும் பண்பினைத் திருமுடியில் இருக்கும் இளம்பிறைச் சந்திரன் உணர்த்திக் கொண்டிருக்கிறது. ஆன்மாக்களின் கர்ம வினைகள், தவறுகள், குற்றங்களைத் தமது உள்ளத்தினால் களைத்து அவற்றை இல்லாமற் செய்யும் பேராற்றலை நீலகண்டம் எடுத்துக் காட்டுகிறது. ஸ்ரீ நடராஜப் பெருமான் ஆடலிறை சிவகாமசுந்தரியோடு தம்மை நாடித் தேடி ஓடி வந்தடையும் அடியார்களது யமபயத்தை நீக்கும் தத்துவத்தைத் தென்முகக் கடவுளான ஸ்ரீ நடராஜப் பெருமான் உணர்த்தியவாறு வீற்றிருக்கிறார். ஆனிமாத மகோற்சவம் சிதம்பரத்திலே கோலாகலமாக நிகழ்கின்றது. இலங்கையிலும் பல சிவாலயங்களில் ஆனி உத்தரப் பெருவிழா அபிஷேகங்களுடன் சிறப்பாக நடைபெறுகின்றது.

"மன்னிய தில்லை தன்னுள் ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப் பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே" என்கிறது திருப்பல்லாண்டு. ஆகவே திருமஞ்சனத் தினமாகிய ஆனி உத்தர நன்னாளிலே நடராஜப் பெருமானை விரத அனுட்டானங்களுடன் வழிபாடு செய்து அவனருளைப் பெறுவோமாக!

## 125 ஆவது ஆண்டில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியின் 125ஆண்டுகள் நிறைவுவிழா விரைவில் நடைபெறவுள்ளது. இது தொடர்பான சிறப்பு மலரொன்றையும் வெளியிடுவதற்கு விழா அமைப்புக் குழுவினர் ஏற்பாடு செய்து வருகிறார்கள். கந்தரோடையைச் சேர்ந்த பெரியார் கந்தையா உபாத்தியாயர் அவர்களால் 1894ஆம் ஆண்டில் மேற்படி கல்லூரி ஸ்தாபிக்கப்பட்டது என்பது வரலாறு.

# ஆடி மாதத்து தனித்துவ சிறப்புகள்

தமிழ் மாதங்களில் நான்காவதாக அமைந்திருப்பது ஆடி மாதமாகும். சூரிய பகவான் கடக இராசியில் சஞ்சாரம் செய்யும்போது ஆடி மாதம் உதயமாகிறது. இதுகாலம் கோடைகால வெப்பம் தணிந்து குளிர்மை படிப்படியாக ஆரம்பமாகும் இயல்பு கொண்டது.

ஆடி மாதப் பிறப்பு முன்னாளில் சைவத்தமிழ் மக்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வந்திருப்பது வரலாறாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இந்நாளன்று ஆடிக்கூழ், கொழுக்கட்டை என்பனவற்றைத் தயாரித்து, வீடுகளில் பூஜை அறையில் சுவாமிப் படங்களுக்கு முன் படைத்து வழிபாடு செய்துவிட்டு குடும்பத்தினருடன் உண்டு மகிழ்வதும், இவற்றை உற்றார் உறவினர்களுக்கு வழங்கி நல்லுறவைப் பேணுவதும் நீண்டகாலமாகவே வழக்கத்திலிருந்து வந்துள்ளது. இப்போது இத்தகைய பாரம்பரிய நடைமுறைகள் பெருமளவு குறைந்துவரும் நிலையிலும், இன்னும் சில இடங்களில் அத்தகைய பாரம்பரியம் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

ஆடிப்பிறப்பு என்றால், பலரது நினைவுக்கு வருபவர் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். ஏனெனில், இவர் இயற்றிய பாடல்களுள் ஒன்றான "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை" என்ற பாடல் மாணவர்கள் மத்தியில் பிரபலம்பெற்று விளங்கியிருக்கிறது. முன்னைய காலத்தில், ஆடிப்பிறப்பு நாளன்று பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருக்கிறது என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. ஏனெனில் ஆடிப் பிறப்புக்கு முதல் நாளன்று பாடசாலையிலிருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சிறுவயது மாணவர்கள் ஒன்றிணைந்து இந்தப் பாடலை பாடிக்கொண்டு சென்றார்கள் என்பதாக அறிய முடிகின்றது.

*"ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை*
*ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே!*
*கூடிப் பனங் கட்டி கூழுங் குடிக்கலாம்*
*கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே!"*

என்று ஆரம்பமாகும் சோமசுந்தரப் புலவரின் பாடல் ஊடாக ஆடிப்பிறப்பு நாளில் தனித்துவ சிறப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆடி மாதத்தில் சில மங்களகரமான கருமங்களை தவிர்த்தாலும் கூட, ஆன்மீக ரீதியில் பல செயற்பாடுகளுக்கு உரிய மாதமாக சிறப்புப் பெறுவதைக் குறிப்பிடவேண்டும். ஆடி மாதத்தில் வரும் செவ்வாய்க்கிழமைகளுக்கு தனித்துவம் உண்டு. முருகன், அம்பாள் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று வருகின்றன.

ஆடி மாதத்து 18ஆம் நாள் வரும் 'ஆடிப்பெருக்கு' ஒரு விழாவாக முக்கியத்துவம் பெறுகின்றது. இது இந்தியாவிலேயே பெருமளவில் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆடிப்பெருக்கு நாளன்று பெண்கள் நதிகளுக்குச் சென்று நீராடுவார்கள். பின்னர் நதியைப் பெண்ணாக உருவகித்து வளையல் குலுங்க பூஜை நடத்துவார்கள். வெற்றிலை, பாக்கு, மஞ்சள், பூ, கருகமணி போன்ற மங்கலப் பொருட்களை வைத்துப் பூஜை செய்து படைத்து நதியில் விடுவது வழக்கம்.

ஆடிப்பெருக்கு நாளன்று புதுமணப் பெண்கள் தங்கள் தாலியையும் பெருக்கிக் கொள்வர். மணமேடையில் திருமணச் சடங்கின்போது கட்டப்படும் தாலியை வேறு கயிற்றில் அல்லது சங்கிலியில் மாற்றிக் கட்டுவதை 'தாலிப்பெருக்கு' என்று அழைக்கப்படுகிறது.

ஆடி மாதத்தில் வரும் அமாவாசை திதிக்கு தனித்துவ மதிப்பு இருக்கிறது. நமது முன்னோர்களுக்கு குறிப்பாக தந்தை வழிவந்த சந்ததியினருக்கு நீத்தார் கடன் அல்லது பிதுர்க் கடன் செய்யும் பாரம்பரிய வழக்கமும் இருந்துவருகிறது. இந்நாளில் மறைந்த தந்தையையும், அவர் வழியிலான சந்ததியினரையும் நினைத்து விரதமிருந்து, பிதுர் தர்ப்பணம் செய்து புனித ஆறு, நதிகளில் நீராடி இறைவனுக்கு பூசை வழிபாடு, அன்னதானம் என்பன செய்வது இன்றும் பின்பற்றப்பட்டு வருகிறது.

ஆடி மாதத்தில் வரும் இன்னொரு சிறப்புத்தினம் ஆடிப்பூரம் ஆகும். அதாவது ஆடி மாதத்து பூரம் நட்சத்திர நாளில் 'ஆடிப்பூரம்' விழா கொண்டாடப்படுகிறது. இந்நாளில்தான் உலக மக்களைக் காக்க சக்தியாக அம்பாள் தோன்றியதாக புராண வரலாறு சொல்கிறது. இத்தினத்தில் அம்பாளுக்கு வளைகாப்பு விழாவும் நடத்தப்படுகிறது. பெரும்பாலான அம்பாள் ஆலயங்களில் ஆடிப்பூர தினத்தை இறுதியாகக் கொண்டு உற்சவங்களும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நாளில் பெண்கள் பாற்குடம் ஏந்தி, தங்கள் நேர்த்தியை நிறைவேற்றி வருகிறார்கள்.

# சங்கீத வித்துவான் ராம் குமாரசாமி மறைவு

இலங்கையின் புகழ்பூத்த சங்கீத வித்துவான் திரு.ராம் குமாரசாமி அவர்கள் கடந்த மாதம் (ஜுன்) 25ஆம் திகதி அமெரிக்காவில் காலமானார். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூத்த இசைக் கலைஞரான இவர், 1983ஆம் ஆண்டுக்குப் பின் புலம்பெயர்ந்து அமெரிக்காவில் வசித்து வந்தார். இவரது மறைவு இசைத்துறை சார்ந்த அனைவருக்கும் மிகுந்த கவலை அளிப்பதாக இருக்கிறது.

நாவலர் நல்வாக்கு



## யாக்கை நிலையாமை

ஆன்மாக்களாகிய நமக்கு இந்த மனித சரீரம் எதன்பொருட்டுக் கடவுளாற் கொடுக்கப்பட்டது என்பதையும், எவ்வியல்பு உள்ளது என்பதையும் நாம் யோசித்தல் வேண்டும். நாம் கல்வி கற்றுத் தரும நெறியினாலே பொருளைத் தேடி வறியவர்களுக்குக் கொடுத்து நாமும் மனைவி மக்கள் முதலிய சுற்றத்தார்களோடு உண்டுடுத்து வாழ்தற்கும், புகழ் புண்ணியங்களைச் செய்தற்கும், எவ் உயிர்களிடத்தும் அன்புடையர்களாய் மனம் வாக்குக் காயங்களினாலே தம்மை வழிபட்டு நல்ல கதியை அடைதற்கும், ஆகவே கடவுள் மனித சரீரத்தை நமக்குத் தந்தருளினார்.

கடவுளையும், புண்ணிய பாவங்களையும், அவைகளின் பயன்களாகிய சுகதுக்கங்களையும் பகுத்தறியும் அறிவு மனிதர்களிடத்து இருத்தலால், அஃதில்லாத விலங்கு பறவை முதலிய பிறப்புக்களிலும் மனிதப் பிறப்பு மிக உயர்ந்தது. நாம் கீழுள்ள பிறவிகளையெல்லாங் கடந்து இம்மனிதப் பிறப்பை அடைவது மிகுந்த அருமை. இந்த அருமையாகிய மனித சரீரமுமோ அழிவுள்ளது. ஆதலினால், இது உள்ள பொழுதே இதனாலே தேடற்பாலனவாகிய கல்வி செல்வங்களையும் புகழ் புண்ணியங்களையுந் தேடிக்கொள்ள வேண்டியது அத்தியவசியகமாம்.

பலவித செல்வங்களையும் பெற்று அநுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதே, மனிதர்களுக்கு மூப்பும் மரண வேதனையும் வருகின்றன. இவைகளோடு நோயும் வந்து சேர்ந்தால் இவர்கள் படும் பாட்டைச் சொல்லவும் வேண்டுமா! அப்பொழுது, பகுத்தறிவுள்ள மனிதர்கள் செய்வன இவை தவிர்வன இவை என்று அறியாது, பிறருடைய சகாயத்தை விரும்பி மிகுந்த வருத்தப்படுகின்றார்களே! மனைவி மைந்தர் முதலாயினோர் செய்யுஞ் சகாயங்கள் தாமும் அத்துயரத்தைத் தாங்கவல்லனவா! இல்லை இல்லை. இவ்வுடம்பின் நிலையாமையை நினைக்கும் பொழுதே நமக்கு ஏக்கம் உண்டாகின்றது. "நேற்றைக்கு இருந்தான் இன்றைக்கு இறந்தான்" என்று கேட்டவுடன் மனம் நடுங்குகின்றது. நேற்று மணமகன் இன்று பிணமகன் ஆதலையும் எங்கள் கண்களே காண்கின்றன. எத்தனையோ பெரிய அரசர்களுடைய சரித்திரங்களைக் கேட்டிருக்கின்றோம்; எத்தனையோ பெரிய வித்துவான்களுடைய நூல்களைப் படிக்கின்றோம். இவர்கள் எல்லாரும் இறந்தவர்களேயன்றி உயிரோடிருந்தவர் ஒருவரும் இலர்.

இப்படி இந்த உடம்பு அநித்தியமும் துக்கமயமுமாய் இருத்தலாலும், இதனாலன்றி வேறொன்றினாலும், நமக்கு ஈடேற்றம் இலலாமையினாலும், யாவரும் இவ்வுடம்பு உள்ள பொழுதே கல்வி செல்வங்களையும், அவற்றினாலே புகழ்புண்ணியங்களையும், சம்பாதித்தல் வேண்டும். கல்வி செல்வங்களைச் சம்பாதிக்கும்போது, இறப்பில்லாதவர்கள் போலவும், தருமத்தைச் செய்யும்போது யமன் கையில் அகப்பட்டுக் கொண்டவர்கள் போலவும், எண்ணுதல் வேண்டும். இந்த நினைவிருந்தால் வாழ்நாள் வீணாகமாட்டாது; நிலையில்லாத மனிதசரீரத்தாற் பயனை அடைந்தவரும் இவரேயாவர்.

**(பாலபாடம் - மூன்றாம் புத்தகம்)**

---

சிவயோக சுவாமிகளின் நற்சிந்தனை



## காயமே கோயில்

காயமே கோயில் கடிமன மடிமை
நேயமே பூசை நீயிதை யறிந்தே
உபாயமாய் நடந்தா லுனக்கொரு குறைவிலை
ஆயநான் மறையும் இப்படி யறையும்
எள்ளள வேனும் பிரியா இறைவனைக்
கள்ள மனத்தவர் காண மாட்டார்
உள்ளமே கோயில் உயிரே விளக்கு
உள்ள வுள்ள உண்மை யுதிக்கும்
பகைவ ருறவோ ரென்று பகரும்
வகையை நீக்கிச் சிவசிவா வென்ன
உவகை யுன்னை விழுங்கிக் கொள்ளும்
தகைமை யிதுவே சாதனை செய்யே
சாதனை செய்வோர் தன்னை யறிவார்
பேதபுத் தியைத்தவிர் பெம்மா னருளால்
நீர்மேற் குமிழியிவ் வாக்கை வாழ்வே
ஆதலா லன்பர் பணியே யறமாம்
பணியப் பணியப் பாவ மகலும்
அணிமா வாதியாம் சித்திக ளெய்தும்
பிணியுமகலும் பேரின்பம் வாய்க்கும்
துணிவுண் டாகும் சொல்லொணாச் சுகமே
எல்லா வுயிரையுஞ் சிவனென வெண்ணி
நல்லறம் புரிவோர் நாடுவார் பரகதி
அல்ல லறுப்பார் ஆனந்தம் பெறுவார்
தில்லை நடேசனைச் சேருவார் திண்ணமே
உடல்பொரு ளாவியுன் னடைக்கல மென்றே
திடமுட னொப்புக் கொடுப்போர் தமக்கு
நடராஜ வள்ளல் நளின பொற் பதத்தை
உடனே கொடுக்கு முண்மை யிதுவே
ஓடவும் வேண்டாம் உலரவும் வேண்டாம்
பாடவும் வேண்டாம் பணியவும் வேண்டாம்
தேடவும் வேண்டாஞ் சிந்திக்க வேண்டாம்
ஆடகப் பொன்னடி சூடிய காலை
ஒழுக்க முயிரினு மோம்பப் படுமென
வழுத்திய பெரியவன் மறைமொழி தன்னை
அழுத்த வழுத்த ஆனந்த வீச்சுரன்
வழுத்தொணா மரஅடி நாடிவாழ் வோமே!

02.08.2019 பிறந்த தினம்

# தமிழ் மக்களது நெஞ்சில் நிறைந்த தனிநாயகம் அடிகள்

அமரர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே" என்னும் திருமூலர் வாக்கு எங்கே? கத்தோலிக்க மதத்துக்குத் தன்னை அர்ப்பணித்து அருட்சீலராக அமையும் வாழ்வு எங்கே? இவை இரண்டும் இணைந்த ஓர் அருட் துறவியாகத் தமிழ்த்தூதராகத் திகழ்ந்தவர்தான் தனிநாயகம் அடிகள். இறைவன் தன்னைத் தமிழ் செய்யுமாறு பல்வேறு காலங்களிலே பலரிடத்து வேண்டியதுண்டு. அத்தகையோர் வரிசையிலே தனிநாயகம் அடிகளும் திகழ்கின்றார். அவரே இதுபற்றித் தன்னுடைய தமிழ்த் தூது (ப.21-22) என்னும் நூலிலே குறிப்பிடுகின்றார்.

"அமெரிக்காவில், மூன்று திங்கள், தமிழர் எவரையும் காண வாய்ப்புப் பெறாத நான், தமிழின் ஒலி இன்பத்தை நுகரக் கருதி, ஒருநாள் திருக்குறளை எடுத்து, வாய்விட்டுப் படிக்கத் தொடங்கினேன். நூலைத் திறந்ததும் முதன்முதல் நான் கண்ட குறட்பா.

*"இருவே றுலகத் தியற்கை திருவேறு*
*தெள்ளிய ராதலும் வேறு"*

என்பது அந்நேரத்தில், இச்செய்யுளின் ஆழ்ந்த கருத்தொன்று எனக்குத் தோன்றிற்று. அஃது உரைகாரர் கருத்துமன்று; உழைப்பைப் பற்றிய கருத்துமன்று; என் அருள் மறையின் கருத்தொன்று அச்சொற்களில் பொதிந்திருப்பது கண்டேன். அவ்வடிகளின் மென்மையையும் இனிமையையும் நுகர்ந்தேன். அப்பொழுதும், இத்துணைச் சிறப்புப் பெற்ற இலக்கியத்தையும், இதனைத் தோற்றுவித்த மொழியையும் பரப்புதல் வேண்டுமெனும் துணிவும் மிகுதியாய் ஏற்பட்டது. திசைநோக்கி இயேசுவின் கோயிலையும், தமிழ் மொழியை எனக்குத் தாய்மொழியாகத் தந்த இறைவனையும், கைகூப்பி வணங்கினேன். இறைவனுடைய அருட்செயல் என்று எண்ணித் தமிழ்த் தூதினை நன்கு செய்தவர் தனிநாயக அடிகள்.

திருமந்திர வாக்கைத் தன் மந்திரமாகக் கொண்டு வாழ்ந்தவர் தனிநாயகம் அடிகள். சங்க இலக்கியத்திற் கூறிய "யாதுமூரே யாவரும் கேளிர்" எனும் கொள்கையையும், இருபதாம் நூற்றாண்டிலே பாரதியார் கூறிய "திறமான புலமையெனின் வெளிநாட்டார் அதனை மதிக்கச் செய்தல் வேண்டும்" எனும் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொள்கையாகக் கொண்டவர் அவர். தேமதுரத் தமிழோசை தரணியெல்லாம் முழங்கச்செய்த அத்தமிழ்த் தூதுவர் தமிழுலகிலே தனிநாயகமாக விளங்கினார்.



தமிழாய்விலே அவர் அச்சூழலிற் சாதித்தவை யாவையென நோக்குதல் மிகப் பொருத்தமாகும். 1964ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிற் புதுடில்லியில் நடைபெற்ற அனைத்துலகக் கீழைத்தேய அறிஞர் மகாநாட்டின்போது, ஜனவரி மாதம் 7ஆம் நாள், அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் தனிநாயகம் அடிகளின் முயற்சியால் நிறுவப்பட்டது. அதுவரை யாவரும் செய்திராத பெருமளவில் ஐரோப்பியா, ஆபிரிக்கா, ஆசியா முதலிய எல்லாக் கண்டங்களிலுமுள்ள தமிழறிஞர்களை ஒன்றுகூட்டி முதலாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை 1966ஆம் ஆண்டு மலேசியாவிற் கூட்டுவித்தார். அவ்வாராய்ச்சி மகாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்திய மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரகுமான் பின்வருமாறு குறிப்பிட்டார்: "எமது பல்கலைக்கழகம் இந்திய கலாசார இயல், பலமொழிகளிற் பாண்டித்தியம் பெற்ற விரிந்த மனப்பான்மையுடைய ஓர் அறிஞரைத் தலைவராகப் பெற்றது எமது பல்கலைக் கழகத்தின் பெரும் பேறாகும். நான் இங்கு குறிப்பிடுவது பேராசிரியர் தனிநாயகம் அடிகளாரையே ஆகும். அவருடைய தலைமைதான் இம் மகாநாட்டை இப் பல்கலைக்கழகத்திற் கூட்டுவதற்கு வழிவகுத்ததாகும்." இம் மகாநாட்டிற் பங்கு பற்றிய தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் தனது ஆசியுரையிற் கூறியதாவது,"மலாயப் பல்கலைக்கழகம் இம் மகாநாட்டை கூட்டுவதில் முன்னின்றமைக்கு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அத்துடன் அருட்டிரு தனிநாயகம் அடிகளார் இம் மகாநாடு நடத்துவதில் பெருமுயற்சி செய்து இதனை நடைமுறையிற் செயற்படுத்தியமையை நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்."

இம் மகாநாட்டினைத் தொடர்ந்து 1968ஆம் ஆண்டு தமிழ்நாட்டிற் சென்னையிலும், 1970ஆம் ஆண்டு பிரான்சு தேசத்திலே பாரிஸ் மாநகரிலும் இரண்டாவது, மூன்றாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடுகள் நடைபெற்றன. இவற்றை நடத்துவதிலும் தனிநாயகம் அடிகளுக்குப் பெரும் பங்குண்டு. எனவே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம் அடிகளாரின் குழந்தையாகும். இக்குழந்தைக்குப் பத்தாவது ஆண்டு இறுதியில் ஒரு தத்து ஏற்பட்டது. அதாவது, 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலே நடைபெற்ற நான்காவது உலகத்

தமிழாராய்ச்சி மகாநாடு தொடங்குவதன் முன்னர் உலகத் தமிழாராய்ச்சி மன்றத்திற்குப் பெரிய சோதனை ஏற்பட்டது. பல "பெரிய புள்ளி" களின் எதிர்ப்புக்கும் அரசாங்கத்தின் பலத்த தடைகளுக்கும் மத்தியில் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டினை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டியிருந்தது. அப்போது குழந்தையைத் தனிக்க வைத்துவிட்டு ஓடிவிட்டார் என்று அடிகளார் மீது பலர் பழி சுமத்த முயன்றனர். குழந்தைத் துரோகம் அறியாத தமிழ்ப் பண்பாட்டுக் காவலர் அவர். எனவே தான் தத்திலிருந்து குழந்தையைத் தப்ப வைக்க எம்மோடு சேர்ந்து உழைத்தனர். இக்குழந்தையின் வளர்ச்சியே தமது இலட்சியம் என்பதை நான்காவது மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியபோது உலகறியச் செய்தார்.

நான்காவது தமிழாராய்ச்சி மகாநாட்டில் அடிகளார் நிகழ்த்திய ஆரம்ப உரையின் இறுதியிற் பின்வருமாறு குறிப்பிட்டார். "யாழ்ப்பாணத்திற் பல்கலைக்கழகம் ஒன்று இருந்தால் இந்த மகாநாட்டினை இன்னும் எவ்வளவோ சிறந்த முறையில் நடத்தியிருக்கலாம். தமிழாராய்ச்சி நமது நாட்டில் வளர்வதற்கு வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக்கழகங்கள் வேண்டும். ஐந்தாவது மகாநாடு மதுரைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற வேண்டுமென விரும்புகின்றோம்". அடிகளாரின் கனவு நனவாகி விட்டது. வடக்கிலும் கிழக்கிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டுவிட்டன. ஐந்தாவது மகாநாடு 1981ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் மதுரையில் நடைபெற்றது.

இதுவரை நடாத்திய மகாநாடுகள் மூலம் தனிநாயகம் அடிகளார் சாதித்தவை யாவை? முதலாவதாக, தமிழ் இலக்கியம் பற்றியோ மொழி பற்றியோ ஆராயும் உரிமை தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கே உரியதென்ற கொள்கையை இவர் தகர்த்தெறிந்து விட்டார். தமிழாராய்ச்சி குறுகிய எல்லைக்குட் கட்டுப்பட்டிராது பரந்து விரிந்து பல துறைகளில் விருத்தியடைந்து இருக்கின்றது. தமிழ் இலக்கியம் பற்றியும் தமிழ் இலக்கணம் பற்றியும் உள்ள ஆராய்ச்சி மட்டும் தமிழாராய்ச்சி என்ற நிலை மாறி, தமிழ் மக்கள் வரலாறு, தமிழ் மக்கள் மனிதவியல், தமிழ் மக்கள் சமயங்கள், தத்துவங்கள், தமிழ்த் தொல்பொருளியல், தமிழ்நாட்டவர் பிறநாட்டவரோடு கொண்ட தொடர்புகள், தமிழர் பண்பாடு, தமிழ்க் கலைகள், தமிழ் மொழியியல் இன்னோரன்ன பல துறைகளிலும் தமிழாராய்ச்சி விரிந்து சென்றிருக்கின்றது. இவர் முயற்சியின் பயனாகத் தமிழ் இலக்கியத்தின் சிறப்புப் பற்றியும் பண்பாட்டு வளர்ச்சி பற்றியும், தொன்மை பற்றியும், மொழியியல் பற்றியும் பல உண்மைகள் வெளிவந்துள்ளன.

மேலும், இவரது தொண்டினால் இன்று பிறநாடுகள் பலவற்றிலுள்ள பல்கலைக்கழகங்களிலே தமிழை ஒரு பாடமாக அமைத்திருக்கின்றனர். தமிழ் ஆராய்ச்சியில் அப்பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஈடுபடுகின்றனர். ஒருகாலத்தில் மேல்நாட்டுப் பல்கலைக்கழகங்களிற் சமஸ்கிருதம் பற்றியும், இந்தோ-ஆரிய மொழிகள் பற்றியுமே ஆராய்ச்சி செய்து வந்தனர். இப்பொழுது அந்நிலை மாறி, தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் வரலாறு, தமிழர் பண்பாடு முதலியன பற்றியும் ஆராய்ச்சி செய்கின்ற நிலை இப்பல்கலைக்கழகங்களில் உருவாகி வளர்ச்சி பெற்றிருக்கின்றது. முன்பு பிறநாட்டார் சமயப் பிரச்சாரத்திற்கும், வணிகப் பெருக்கத்திற்கும், அரசியல் ஆதிக்கத்திற்கும் தமிழைப் பெரும்பாலும் கற்றனர். ஆனால் இன்று ஆராய்ச்சிக்காகவும், தமிழ்மொழியின் சிறப்பியல்புகளுக்குமாகவே தமிழை அவர்கள் கற்கின்றனர். மொழிகளிற் சிறந்த தமிழ்மொழியை அறியாது இந்தியாவின் அடிப்படைப் பண்பாட்டையும், கலைகளையும் அறிய முடியாதென உணர்ந்து தமிழைப் பயின்று வருகின்றனர். அவர்களின் தமிழ்ப்பற்றையும், அபிமானத்தையும் அவர்கள் தமக்கும், தமது பிள்ளைகளுக்கும் தமிழ்ப் பெயர்கள் வைப்பதிலிருந்து மதிப்பிடலாம். ரஷ்யாவிலுள்ள அறிஞர்கள் செம்பியன், ஐங்குன்றன் என்று தமிழ்ப் பெயர்களை தமக்குச் சூட்டிக் கொள்ளுமளவிற்குத் தமிழ் அபிமானம் கொண்டுள்ளனர். செக்கோசிலவாக்கியத் தமிழாராய்ச்சியாளர் ஒருவர் தம் மக்களுக்குக் கண்ணம்மா என்று பெயர் இட்டுள்ளார். இவர்கள் தாம் இறந்த பின்பு தமது கல்லறையிலே "தமிழ் மாணவர்" என்று பொறிக்கப்பட வேண்டுமென விரும்புகின்றனர். மறுபிறப்பெடுத்தால் தாம் தமிழராகப் பிறக்க வேண்டுமென இவர்கள் விரும்புகின்றனர்.

இவ்வாறு தமிழியல் ஆராய்விலே பல புரட்சிகள் ஏற்படுவதற்கு கர்த்தாவாக இருந்த அடிகள், தாம் செல்லும் நாடுகளிலே தமிழ்த் தூதர் ஆயும் விளங்கித் தமிழின் மென்மை பற்றியும், தமிழ்ப் பண்பாட்டின் தொன்மை பற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், கட்டுரைகள் எழுதியும், வானொலியில் பேசியும் அந்தந்த நாட்டு மக்களுக்குத் தமிழ் மொழியிடத்தும், தமிழ் பண்பாட்டிடத்தும் அன்பும், ஆதரவும், அக்கறையும் ஏற்படச் செய்தார். உலகமெல்லாம் தமிழ்முழங்கத் தமிழ்ப் பண்பாடு (Tamil Culture) என்ற ஆங்கில முத்திங்கள் இதழ் ஒன்றைத் தோற்றுவித்து அதன் ஆசிரியர் ஆகவும் பல்லாண்டுகள் பணி செய்தார். இவ்வாறு தமிழையே தமது மூச்சாக, தமது உயிராகக் கொண்டு வாழ்ந்தவர் தனிநாயகம் அடிகளார். தமிழ்மக்கள் உலகிலே எப்பகுதியிலே வாழ்கிறார்களோ அவர்கள் மத்தியிலெல்லாம் அடிகளார் என்றும் நிலைத்து நிற்பார். தமிழியல் ஆய்விலே ஈடுபடும் அறிஞர்கள் உலகின் பல பாகங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தம் அறிவு இருக்கும் வரையில் அடிகளார் நினைவு நிலைத்து நிற்கும்.

**(தனிநாயகம் அடிகளார் நினைவுமலரில் (1981) இடம்பெற்ற கட்டுரை)**

19.07.2019 - நினைவுதினம்

# சுவாமி விபுலானந்தரின் பன்முகப் பணிகள்



## பல்கலைக்கழகப் பணி

தமிழகத்திலே சென்னைப் பல்கலைக்கழகம் 1858ஆம் ஆண்டினிலே தோன்றியது. ஏறக்குறைய 75 ஆண்டு காலம் தமிழகத்திலே வேறு பல்கலைக்கழகங்கள் தோன்றவில்லை. ஆதலால் ஒரு புதிய பல்கலைக்கழகம் தோற்றுவிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை பிரித்தானிய அரசுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. எனவே இதுபற்றி ஆராய்வதற்காக வந்த குழுவின் முன்னர் சாட்சியம் அளிப்பதற்காக பிரபல கல்வியாளரும், அறிவாளியும், சமூக பிரதிநிதியுமாகிய சுவாமி விபுலானந்தர் அடிகளாரைச் சென்னைப் பல்கலைக்கழகம் அழைத்தது. அடிகளாரின் ஆணித்தரமான வாதத்தை அந்த விசேட குழு அங்கீகரித்தமையால் 1927ஆம் ஆண்டிலே சிதம்பரத்திலே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோன்றியது. அதன் தமிழ்த்துறைத் தலைமையை ஏற்குமாறு அடிகளார் வேண்டப்பட்டார். 1932இல் அடிகளார் அப்பதவியை ஏற்றுக்கொண்டார்.

தமிழிசையில் பெரும் ஆர்வமுடைய அடிகளார் பண்டைய தமிழ் இசைக்கருவியான யாழ் முற்றாகவே பாவனையில் அற்றுப் போயிருப்பதைக் கண்டு மனவேதனைப்பட்டார். ஆகவே அது பற்றிய ஆய்வில் ஈடுபட விரும்பினார். அவரது பௌதிகவியல் மற்றும் கணித அறிவு அடிகளாருக்கு இசையின் மிகவும் நுணுக்கமான தகவல்களைத் தர முடிந்தது. தனது ஆய்வுக்கு முழுநேரத்தையும் செலவிடுவதற்காக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய விபுலானந்த அடிகள் 1933ஆம் ஆண்டினிலே அப்பதவியிலிருந்து விலகி மட்டக்களப்பினில் நிரந்தரமாகத் தங்கிவிட்டார். அது நாள்வரை இலண்டன் பல்கலைக்கழகத்துப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்கு இலங்கை மாணவர்களைத் தயார்படுத்திவந்த கொழும்பு பல்கலைக்கழகக் கல்லூரி 1943 ஆம் ஆண்டில் தானே சொந்தமாகப் பட்டங்களை வழங்கும் தகுதி பெற்ற இலங்கைப் பல்கலைக்கழகமாக அரசாங்க அங்கீகாரம் பெற்றது. புதிய பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைக்குப் பேராசிரியராக பொறுப்பேற்குமாறு அடிகளாருக்கு பல்கலைக்கழக நிர்வாகம் வேண்டுகோள் விடுத்தது. அடிகளார் சம்மதித்து, 1947ஆம் ஆண்டிலே இயற்கை எய்தும்வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராகக் கடமையாற்றினார்.

**- பொ.கனகசபாபதி**
**(நன்றி : எம்மை வாழ வைத்தவர்கள்)**

22.07.2019 நினைவுதினம்

# உன்னத சமூகநல சேவையாளர் மில்க்வைற் கனகராசா



'மில்க்வைற் கனகராசா' என்றால் இந்தப் பெயருக்கு உரியவரை அறியாதவர்கள் ஒருசிலர்தான் இருப்பார்கள். கடந்த நூற்றாண்டில் யாழ்.குடாநாட்டில் பிரபல தொழில் அதிபராக விளங்கியவர் இவர். யாழ்.கே.கே.எஸ் வீதியில் அமைந்திருந்த மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தை நடத்தி வந்தவர் என்பதற்கும் மேலாக சமய சமூகப் பணிகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தவர்.

1927ஆம் ஆண்டில் திரு.வீ.மு.கந்தையா அவர்கள் சிறுமூலதனத்துடன் குடிசைத் தொழிலாக உருவாக்கிய சவர்க்காரத் தொழிலகம் பின்னர் தகரக் கொட்டகையிலும், காலப்போக்கில் மாடிக் கட்டடத்திலும் உயர்ந்து காணப்பட்டது. திரு.வீ.மு.கந்தையா சவர்க்காரத் தொழிலை ஆரம்பித்த 1927ஆம் ஆண்டில் இவரது மகனாகப் பிறந்தவர்தான் திரு.கனகராசா அவர்கள்.

திருமுறைப்பாடல்கள் உட்பட பலவித ஆன்மீக பாடல்வகைகளை உள்ளடக்கியதான சிறுபிரசுரங்களை வெளியிட்டு இலவசமாக வழங்கி வந்தவர். பனைவளம் பாதுகாக்கப்படவேண்டும் என்ற வகையில் பனைமரத்தின் பயன்கள் தொடர்பான நூல்களை வெளியிட்டிருப்பதுடன், பனம் விதைகளையும் சேகரித்து பலருக்கும் வழங்கியிருக்கிறார். சிறுபயிர் உற்பத்தி தொடர்பான விவசாய நூல்கள், பெரியார்களது பொன்மொழிகள் போன்ற பல வெளியீடுகளுடன் சுவாமிப் படங்களையும் அச்சிட்டு இலவசமாக விநியோகம் செய்துள்ளார். நவராத்திரி காலத்தில் ஏடு தொடக்கும் பிள்ளைகளுக்கு உதவும் வகையில் பனை ஓலையில் அரிச்சுவடிகளை அச்சுப் பதிப்பு செய்வித்து இலவசமாக வழங்குவதையும் தன் மேலான பணியாகக் கொண்டிருந்தவர். இவர் வெளியிட்டு வந்த 'மில்க்வைற் செய்தி' என்ற மாத வெளியீடு அந்நாளில் பலரது பேரபிமானத்தைப் பெற்றுத் திகழ்ந்தது.

இவரது சமூகப் பணிகளை மதிக்கும் வகையில் அரசு சமாதான நீதவான் பட்டம் வழங்கி கௌரவித்தது. பல, சமய, சமூக நிறுவனங்கள் பூலோக கற்பகதருநாயகர், திருமுறைகாவலர், சிவதர்மவள்ளல், சிவநெறிப்புரவலர் போன்ற பல பட்டங்களை இவருக்கு வழங்கியிருக்கின்றன. இவர் 1998 ஜூலை 22ஆம் திகதி காலமானார்.

சிறுகதை

# உயிர்த் துணை

தி. ஞானசேகரன்

பொன்னி !

இப்போது நினைத்தாலும் என் உடலெல்லாம் சிலிர்க்குதடி! உனக்கு எவ்வளவு தியாக சிந்தை! மனிதப் பிறவியெடுத்த எவருமே செய்யத் துணியாத தியாகமல்லவா நீ செய்தது.

அதனை நினைக்கும்போது என் கண்கள் குளமாகுதடி. கண்களென்றா சொன்னேன்? எனக்கேது கண்கள்? கண்கள் இருக்கவேண்டிய இடத்தில் இரு குழிகள் அல்லவா இருக்கின்றன.

நீதானே எனக்குக் கண்களாக இருந்தாய்! ஏன் எனது உற்றார் உறவினர், சொந்த பந்தம் எல்லாமாக இருந்தவளும் நீதானே.

நான் ஒரு பிச்சைக்காரன். இந்தக் குருட்டுப் பிச்சைக்காரனோடு நீயும் சேர்ந்துகொண்டாய். இதனால் உனக்கு கிடைத்த பலன்?

நான் பட்டினி கிடக்கும்போது நீயும் பட்டினி கிடந்தாய். நான் அரைவயிற்றுக்கு உண்ணும்போது நீயும் அரைவயிற்றுக்கு உண்டாய். நான் கவலைப்படும்போது நீயும் கவலைப்பட்டாய். இந்தக் கபோதியோடு சேர்ந்துகொண்டதால் ஒரு நாளாவது நீ மகிழ்ச்சியடைந்திருப்பாய் என நான் நினைக்கவில்லை.

பொன்னி!

உன்னை நான் முதன் முதலில் சந்தித்த நிகழ்ச்சி இப்போது கூட என் நினைவில் இருக்கிறது. அந்தப் பசுமையான நினைவை எப்படி என்னால் மறந்துவிட முடியும்?

ஊரின் ஒதுக்குப்புறமாக இருக்கும் ஒரு மடந்தான் எனது இருப்பிடம். அந்த மடத்தில் வழக்கம்போல் அன்றும் நான் தனியாகத்தான் படுத்திருந்தேன். வெகுநேரமாகத் தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தது. என்னால் எங்கும் வெளியே செல்ல முடியவில்லை. எத்தனையோ நாட்கள் பட்டினியாகக் கிடந்து என் வயிற்றைப் பழக்கியிருக்கிறேன். அன்றும் நான் பட்டினியாகத்தான் இருந்தேன். பசி மயக்கத்தில் கிறங்கிப்போய்க் கிடந்தேன்.

பறவைகளின் கீதங்கள், மனிதர்களின் குரல்கள், இயந்திரங்களின் இரைச்சல்கள் நிறைந்திருக்கும் நேரந்தான் பகற்பொழுதாக இருந்தால், அன்று நான் உன்னைச் சந்தித்தது இரவு நேரமாகத்தான் இருக்க வேண்டும்.

அப்போது எனக்கு உடமையாக இருந்த பொருட்கள் ஒரு போர்வையும் கைத்தடியுந்தான். போர்வையை நிலத்திலே விரித்து, கைத்தடியையும் பக்கத்திலே வைத்துக்கொண்டு படுத்திருந்தேன்.

திடீரென ஏதோ அரவம் கேட்டது. எனக்குப் பக்கத்தில் யாரோ படுத்திருப்பதைப் போன்ற ஒரு பிரமை. மெதுவாகக் கையினால் தடவிப் பார்த்தேன்.

எனது உடலிலே ஒரு சிலிர்ப்பு! அச்சத்தோடு கையை இழுத்துக்கொண்டேன்.

வெளியே மழை கொட்டிக்கொண்டிருந்தது. நீயும் என்னைப் போன்ற ஓர் அநாதையாகத்தான் இருக்க வேண்டும். புகலிடந் தேடித்தான் நீ அங்கு வந்திருக்கிறாய் என்பதைப் புரிந்துகொண்டேன்.

எங்கோ இடியிடிக்கும் ஓசை. அதற்கு முன்னர் மின்னலும் இருந்திருக்க வேண்டும்.

எனது உள்ளத்திலே நடுக்கம். இடிமின்னல் என்றால் எனக்கு ஒரே பயம். நான் பதினாறு வயதுக் கட்டிளங் காளையாகக் கல்லூரிக்குச் சென்றுவந்துகொண்டிருந்த காலத்தில் ஒரு பயங்கரமான மின்னலின் தாக்குதலினாலேதான் என் பார்வையை இழந்தேன்.

மீண்டும் இடியிடிக்கும் ஓசை.

பயத்தினால் நான் உன்னைக் கட்டிப் பிடித்தேன். நீ மௌனமாகப் படுத்திருந்தாய். உனக்கும் அப்போது பசி மயக்கமாக இருந்திருக்குமோ என்னவோ.

எனது பயம் சிறிது குறைந்தபோது நான் உன் உடலை ஆதரவோடு தலையிலிருந்து கால்வரை தடவிக்கொடுத்தேன். எங்கே நீ என்மேல் கோபித்துக்கொள்வாயோ என அப்போது எனக்கு அச்சமாகவும் இருந்தது.

நீ எனது ஸ்பர்சத்தை உணர்ந்து கொள்ளாதவள் போலப் படுத்திருந்தாய்.

உனக்குத் தருவதற்கு என்னிடம் உணவு ஏதும் இல்லையே என நான் கவலையடைந்தேன். எனது பசிகூட அப்போது எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. சிறிது நேரத்தில் என்னை அறியாமலே நான் நித்திரையாகி விட்டேன்.

எங்கோ பறவைகள் பாடின.

நான் நித்திரை கலைந்து எழுந்திருந்தபோது, நீயும் பக்கத்திலே படுத்திருக்கிறாயா என ஆவலுடன் தடவிப் பார்த்தேன்.

நீ எனக்கு முன்னரே எங்கோ எழுந்து சென்று விட்டாய்.

மறுநாள் இரவும் நீ வந்தாய். உரிமையுள்ளவள் போல் என் பக்கத்திலே வந்து படுத்தாய்.

எனக்கு அழவில்லாத மகிழ்ச்சி. யாருமற்ற அநாதையாக இருந்த எனக்கு உனது உறவு கிடைத்ததில் ஒருவித மனநிறைவு.

அன்றும் உனது உடலை ஆசையோடு நான் தடவினேன். உனது அழகைப் பார்த்து மகிழ்வதற்கு எனக்குக் கண்கள் இல்லை என்பதை தெரிந்துதானோ என்னவோ, உனது உடலை நான் தடவிப் பார்ப்பதற்கு நீ எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் இருந்தாய்.

அன்று எனக்காக வைத்திருந்த உணவில் உனக்கும் பகிர்ந்து கொடுத்தேன். நீ அருந்தினாய். அன்று இரவு முழுவதும் எனக்கும் நித்திரை வரவில்லை. ஏதேதோ கற்பனைகளில் திளைத்திருந்தேன்.

அதன்பின்னர் அல்லும் பகலும் நீ என்னைவிட்டுப் பிரியாமல் இருக்கத் தொடங்கிவிட்டாய்.

பொன்னி!

ஆதரவற்றுத் தனிமனிதனாகத் திரிந்த எனக்கு நீ வந்த பின்புதான் வாழ்க்கையில் ஒருபிடிப்பு ஏற்படத் தொடங்கியது. எத்தனையோ நாட்கள் சோம்பற்தனமாகப் பட்டினியாகவே நான் காலத்தைக் கடத்தியிருக்கிறேன். ஆனால் நீ வந்த பின்னர் உனக்கு உணவு தரவேண்டுமே என்ற உணர்வில், என்னுள் புதிய தென்பு பிறந்தது. நான் ஒரு மனிதனாகினேன்.

பிச்சையெடுக்கும் பணத்தில் சிறிது சிறிதாகச் சேர்த்து ஒரு சங்கிலி வாங்கி உன் கழுத்தில் அணிந்து உனது அழகை என் அகக்கண்களால் பார்த்து மகிழ்ந்தேன்.

பொன்னி!

நான் ஐந்து வயதுச் சிறுவனாக இருந்தபோது ஒரு குருடனைப் பார்த்திருக்கிறேன். அவனுக்குத் துணையாக ஒரு சிறுவன் இருந்தான். அந்தக் குருடனது கைத்தடியைப் பற்றிக்கொண்டு சிறுவன் முன்னே நடந்து செல்வான். குருடன் அவனைப் பின்தொடர்வான். அந்தக் குருடன் போகவேண்டிய இடங்களுக்கெல்லாம் சிறுவன் அவனை அழைத்துச் செல்வான். அல்லும் பகலும் அந்தச் சிறுவன் குருடனுக்குத் துணையாக இருந்தான்.

அந்தக் குருடனுக்குச் சிறுவன் - மகன்.

ஆனால் எனக்கு நீ - ............?

பொன்னி!

நான் பெரிய சுயநலக்காரன். நீ எங்கே என்னை விட்டுப் பிரிந்து விடுவாயோ என்ற பயத்தில், நான் உன் சுதந்திரத்திலே கூடக் குறுக்கிட்டிருக்கிறேன். அதனை நினைக்கும்போது எனக்கு இப்பொழுதும் வெட்கமும் வேதனையாகவும் இருக்குதடி.

உன் அரையிலே ஒரு கயிற்றைச் சுற்றி, அந்தக் கயிற்றின் தலைப்பை நான் பிடித்துக்கொள்வேன். நீ முன்னே நடந்துசெல்வாய். என் வழிகாட்டியாக, ஒளி விளக்காக....., என் கண்களாக...., என்னைக் காப்பாற்றும் உறுதுணையாக நீ முன்னே செல்வாய். நான் உன்னைப் பின்தொடர்வேன்.

எத்தனையோ மனிதர்கள் இந்தக் காட்சியைப் பார்த்துச் சிரித்திருப்பார்கள், கேலி செய்திருப்பார்கள். பிறரைப் பார்த்துச் சிரிப்பதும் கேலி செய்வதும் மனித இனத்துக்கே சொந்தமான பலவீனங்கள்தானே.

அப்போது உனக்கு வெட்கமாக இருந்திருக்குமோ என்னவோ. உனது விருப்பத்துக்கு மாறாக நான் எத்தனையோ தடவை நடந்திருக்கிறேன்.

ஆனால் ஒருபொழுதாகிலும் என் செய்கைகளுக்கு நீ எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை. நீ சாதிப்பதெல்லாம் மௌனந்தான்.

ஏன் பொன்னி! இந்தக் குருடனின் மனதைப் புண்படுத்தக் கூடாதென்றா அப்படி மௌனம் சாதித்தாய்?

காலையில் என்னை மனிதர்கள் நிறைந்த பகுதிக்கு அழைத்துச் செல்வாய். நீ அநேகமாக என்னை அழைத்துச் செல்லுமிடம் ஒரு நாற்சந்தி என்பதையும், அங்கு ஒரு மூலையில் மின்சாரக் கம்பமும், அதையடுத்து பஸ் தரிப்பு நிலையமும் இருக்கின்றன என்பதையும், என் உணர்வுகளால் அறிந்திருக்கிறேன்.

பகல் முழுவதும் அந்தத் தெருவால் போகிறவர்களிடத்திலும், பஸ்தரிப்பு நிலையத்தில் நிற்பவர்களிடத்திலும் நான் யாசித்துக் கொண்டிருப்பேன். என் முன்னே ஒரு துண்டு விரிக்கப்பட்டிருக்கும்.

இரக்க மனம் படைத்த புண்ணியவான்கள் சிலர் என் துண்டிலே சில்லறையை வீசுவார்கள்.

ஒருநாள்.......

அன்றுதானடி உன் கோபத்தைக் கண்டேன். சன நடமாட்டம் குறைந்த நேரம். பஸ்தரிப்பில் நின்று கொண்டிருந்த யாரோ ஒருவன் என் துண்டிலே சில்லறையைப் போடுவதுபோல் நடித்து, துண்டிலே இருந்த சில்லறையில் சிலவற்றைத் திருடிவிட்டான். அந்தக் கயவனின் செய்கையைக் கண்டபோது அப்பப்பா நீ அடைந்த சீற்றம்.

அப்போது எனக்கு ஏற்பட்ட சந்தேகத்தில், துண்டிலிருந்த பணம் சரியாக இருக்கிறதா எனத் தடவிப் பார்த்தபோதுதான் நான் இதனை உணர்ந்துகொண்டேன்.

சிறுமை கண்டு பொங்குவாய் நீ, என்பதை அன்றுதான் நான் அறிந்தேன். பொன்னி! உனக்கு அவ்வளவு கோபம் கூடாதடி!

மனிதர்களிற் சிலர் மனிதாபிமானமற்ற வாழ்க்கை நடத்துவது உனக்குத் தெரிந்திருக்க முடியாதுதான். பிழைவிடுவது மனித இயற்கையென்றால் மன்னிப்பது தெய்வ குணமடி. நான் அப்போது உன்னைத் தடுத்து நிறுத்தியிருக்காவிட்டால், நீ அவனை என்ன செய்திருப்பாயோ எனக்கே தெரியாது. உனது சீற்றத்தைக் கண்ட அந்தக் கயவன் தான் எடுத்த பணத்தைப் போட்டுவிட்டு ஒரே ஓட்டமாக ஓடிவிட்டான்.

பொன்னி!

நான் உன்னைச் சந்திப்பதற்கு முன்னால் அடைந்த கஷ்டங்களுக்கு அளவேயில்லை. அப்போது எனது கைத்தடிதான் என் வழிகாட்டி. நான் செல்லும் பாதையைக் கைத்தடியினால் தட்டித் தட்டி ஆராய்ந்தபடி நடப்பேன். எத்தனையோ நாட்கள் எனது கால்களைக் கற்களும் முட்களும் பதம் பார்த்திருக்கின்றன. எத்தனையோ நாட்கள் பள்ளங்களிலும் மேடுகளிலும் நான் விழுந்து எழுந்திருக்கிறேன். எத்தனையோ நாட்கள் கார்களிலும், பஸ்களிலும் மோதி என் உயிருக்கே ஆபத்து ஏற்படக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. ஒருநாளாவது எனது உடலில் காயமே இல்லாத நாள் இருந்ததில்லையடி.

நீ வந்த பின்புதான் என் கஷ்டங்கள் எல்லாம் நீங்கின. என் வாழ்வின் ஒளிமயமான காலம் பிறந்தது. நான் உன் கண்களால் உலகத்தைப் பார்க்கத் தொடங்கினேன்.

பொன்னி!

இப்பொழுது நினைத்தாலும் என் உள்ளம் பதறுதடி. என் உடலெல்லாம் நடுங்குதடி. அந்தச் சோக நிகழ்ச்சி என் இரத்தத்தையே உறையச் செய்யுதடி. அன்று கடும் மழை, இடி, பேய்க்காற்று, எங்கோ மரங்கள் முறிந்து விழும் ஓசை. இயற்கையின் சீற்றம் - இது என் வாழ்க்கையில் எவ்விதமெல்லாம் விளையாடி விட்டதடி.மழை சிறிது ஓய்ந்தபோது நான் உன்னையும் அழைத்துக் கொண்டு வெளியே புறப்பட்டேன். உனது நடையிலே ஏனோ தளர்ச்சி! என்னை வெளியே அழைத்துப் போவதற்கு நீ அப்போது விரும்பவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன்.

ஆனாலும் என்ன செய்வது? நான் பிச்சையெடுக்காவிட்டால், நான் மட்டுமா பட்டினி கிடப்பேன்? என்னுடன் சேர்ந்து நீயுமல்லவா பட்டினி கிடக்க நேரிடும்.

வழக்கமாக நீ என்னை அழைத்துச் செல்லும் நாற்சந்திக்குத்தான் அன்றும் அழைத்துச் சென்றாய். பஸ் தரிப்பு நிலையத்தைத் தாண்டி கம்பத்தின் அருகிற் சென்றதும் வழக்கம்போலத் துண்டை விரித்து நான் உட்கார்ந்தேன்.

திடீரென என் காலின் ஊடாக ஆயிரம் மின்னல்கள் ஒன்று சேர்ந்து வெட்டிப்பாய்வதைப் போலிருந்தது.

“ஐயோ ! அந்தக் குருடனின் கால் மின்சாரக் கம்பிக்குள் சிக்கிவிட்டது” பஸ்தரிப்பில் நின்ற யாரோ கத்தினார்கள்.

கடும் மழையாலும் புயலாலும் சேதமடைந்த மின்சாரக் கம்பத்திலிருந்து தொங்கி, நிலத்திலே படர்ந்திருந்த கம்பியில் எனது கால் சிக்கியிருக்க வேண்டும்.

நான் துடித்துப் புரண்டேன். எனது கைகளும் கால்களும் மாறி மாறி நிலத்தில் அடித்தன. எனது உடல் வலித்து வலித்து இழுத்தது.

உயிர்த் துடிப்பு!

கணப்பொழுதில் அங்கு சனக்கூட்டம் நிறைந்து விட்டது. பலரது இரக்கம் நிறைந்த ஓலங்கள், கூச்சல்கள், கூக்குரல்கள் - எங்கும் ஒரே பரிதாபக் குரல்கள்.

ஆனால் இந்தக் குருடனைக் காப்பாற்ற ஒருவராவது முன் வரவில்லை. ஒரு குருடனுக்காகத் தங்களது உயிருக்கே ஆபத்துத்தேட யாருமே விரும்பவில்லை.

பொன்னி! பொன்னி!

நான் பலங்கொண்ட மட்டும் கத்தினேன். எனது குரல் தொண்டையிலிருந்து வெளிவர மறுத்து எனக்குள்ளேயே எதிரொலிப்பதைப் போலிருந்தது. பொன்னி!

உனக்கு எப்படித்தான் அந்த வேகம் வந்ததடி! திடீரெனப் பாய்ந்து வெறிகொண்டவள்போல, நீ எனது காலிலே சிக்கியிருந்த கம்பியை உனது வாயினாற் கடித்து இழுத்துக் குதறுவதை நான் உணர்ந்தேன்.

ஐயோ........ !

அந்தக் கணத்திலே உனது மரணத் துடிப்பை அங்கு நின்றவர்கள் பார்த்துக்கொண்டுதான் இருந்திருப்பார்கள். உனது மரண ஓலம் எனது இதயத்தைப் பிளந்து ஒலித்தது.

ஆறறிவு படைத்த மனித ஜென்மங்கள் என் உயிரைக் காப்பாற்றத் தயங்கியபோது, வாய்பேசாத நாற்கால் பிராணியாகிய நீ, உனது உயிரைப் பணயம் வைத்து என்னைக் காப்பாற்றினாய்.

உயிர்த்துணையான உன்னைப் பிரிந்த பின்பும் நான் உயிரோடு இந்த உலகத்தில் இருக்கிறேன். நானும் ஒரு மனித ஜென்மந்தானே!

ஆனால் நீ............

நன்றியுள்ள ஒரு நாய்.

**(நன்றி : கலைமகள் – 1973)**

# வாரியார் சொன்ன கதை

**கவிஞர் சோ.பத்மநாதன்**

இது நடந்தது 1955இல்.
கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் கோயில்.
வீதியில் கூட்டம் அலையெறிகிறது.
வாரியார் பேசிக்கொண்டிருக்கிறார்.

"என் பக்கத்துக் வீட்டில்
ஒரு பொலிஸ்காரர் குடியிருக்கிறார்.
ஒருநாள் பொலிஸ்காரன் மனைவி
என் மனைவியைக் கூப்பிட்டாள்.
"மாமி, கொஞ்சம் காப்பிப் பொடி தருவீர்களா?"
அன்று பார்த்து எங்கள் வீட்டில்
காப்பிப் பொடி தீர்ந்து விட்டது.
"காப்பி இல்லையடி அம்மா!"
என்றாள் என் மனைவி.
பக்கத்து வீட்டுக்காரி நம்பவில்லை.
தன் கணவனிடம் சொன்னாள்
"வாரியாரைக் கொஞ்சம் கவனியுங்கள்!".

நான் என் பாட்டுக்கு ஊர் ஊராக
பிரசங்கம் பண்ணிக் கொண்டிருந்தேன்.
பொலிஸ்காரன் என்னைக் கவனித்துக் கொண்டிருப்பான்
போலும்!
ஒருநாள் வீதியைக் கடக்கும்போது
என்னைப் பிடித்துக் கொண்டான்.
"இவ்விடத்தில் வீதியைக் கடக்க முடியாது!"
நான் கையைப் பிசைந்து கொண்டு நின்றேன்.
(எல்லாம் கோப்பிப் பொடியால் வந்த வினை!)

திடீரென கப்பல்போல ஒரு கார்
அருகில் வந்து நிற்கிறது.
கல்வியமைச்சர் சி.சுப்பிரமணியம் இறங்குகிறார்.
(அவர் என் பரம ரசிகர்).
"சுவாமி! எங்கே இந்தப் பக்கம்?"
"இல்லை, சும்மா தான், வீடு போகிறேன்"
"ஏய் கான்ஸ்ரபிள்! சுவாமியைப் பத்திரமாக
வீட்டை கூட்டிப்போ!"
"Yes Sir!"
"பொலிஸ் காவலோடு வீடு போகிறேன்".

தன் தலைப்புக்குத் திரும்புகிறார் வாரியார்.
"ஏ, எருமை வாகனம் ஏறிவரும் யமனே!
உன்னை வெட்டி ஓட ஓட விரட்டுவேன்!"
அருணகிரியாரால் யமனைப் புறங்காண முடியுமா?
என்று தானே எண்ணுகிறீர்கள்?
முடியும்!
"சி.சுப்பிரமணியத்துக்கு முன் நிற்கமாட்டாது
பொலிஸ்காரனே ஓடுகிறான்,
ஸ்ரீசுப்பிரமணியத்தின் முன் நிற்கும் பக்தனிடம்
யமன் அதிகாரம் செல்லுமா?!"

சொல்ல வந்த செய்தியை வலியுறுத்துகிறார் வாரியார்.

"பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாடிரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளன்றன் கையதுவே".

# மணிவாசகம் தந்த திருவாசகம்

**சு.குகதேவன்**

வீரசம்திரு வாசகம்மணி வாசகமம்மா
வந்துவந்து பாடப்பாட நலம்தருமம்மா
நேயமுறப் பாடநலம் கூட்டிடுமம்மா
நெற்றிவிழி அழகனருட் கொடையிதுவம்மா!

வெள்ளையரும் விரும்பும்மணி வாசகமம்மா
வித்தகராம் போப்பும்மொழி பெயர்த்தநூலம்மா
துள்ளிவரும் வெள்ளமென உள்ளம்குளிரவே
தூயசிவன் கேட்டெழுதி வைத்த நூலம்மா!

அள்ளியள்ளிப் பருகியுமே உள்ளம்குளிருவீர்
அகத்தினிலும் முகத்தினிலும் இறையொளிகாண்பீர்
பொன்னம் பலத்துறையும் தில்லைத் தாண்டவன்
கேட்டெழுதி வைத்ததிறம் தன்னையே பாடும்!

நரிபரி யாகவைத்த நளினத்தைப் பாடும்
நயந்துபரிகள் ஓட்டிவந்த பெருமையைப்பாடும்
எரிக்கும்சுடு மணலில்கிடந்த வாதவூரரின்
எண்ணம்யாவும் சிவனிடத்தில் சேர்ந்ததைப்பாடும்!

அன்றுசிவன் பட்டவடித் தழும்பு முதுகினில்
இன்றுமெம்மில் இருக்குநிலை தன்னையேபாடும்
நன்றுநன்று என்றுவந்து வாதவூரரின்
வாசகமே பாடிப்பாடி மனம்குளிர்வீரே!

பாலைதிருக் கோவைசாழல் கோத்தும்பியூசல்
பாடும்திருத் தெள்ளோனம் என்றெழில்சுட்டும்
சுவைமிகுந்த வாசகத்தைப் பாடி மகிழ்வீரே
சூழுமிடி வறுமைதுயர் ஓட்டி மகிழ்வீரே!

அம்பலத்தில் ஆடல்புரி ஈசனடியினையே
நாடித்தினம் பாடும்திரு வாசகம்பாடும்
எம்பிணிகள் யாவுமோடும் பிறவிப்பிணிகெடுமே
எந்தையீசன் புகழ்மணக்கும் வாசகம்பாடும்!

வெற்றிதரும் வேதனைகள் யாவுமோட்டிடுமே
விண்ணரசில் எமக்குமுற்ற இடத்தைநல்கிடுமே
அற்புதனாம் ஆடல்வல்லான் மண்சுமந்தாடி
நின்றதிறம் பாடும்திரு வாசகம்பாடும்!

முத்தெறி அறியாத மூர்க்கர் ஆகிய
முற்றறிவு பெற்றிடாத வீணரெங்களின்
சித்தமலம் அறுவித்து சிவத்தில் கலந்திடச்
செய்யுதிரு வாசகத்தைப் பாடிமகிழ்வீரே!

பாடப்பாட பழவினைகள் மங்கிமறைந்திடுமே
பரமனடி மலரினிலே எம்மைவைத்திடுமே
ஆடலு கந்தபிரான் அம்பலவாணன்
அடியினையே தொழுதுமனம் உருகிடப்பாடும்!

பெருந்துறையில் நலம்படைத்த பெருமானைப்பாடும்
பேதமில்லா ஞானவொளி அமுதினைப்பாடும்
அருமைமணி வாசகநல் அமுதினைப்பாடும்
ஆறுசடைக் கணிந்தபிரான் புகழினைப்பாடும்!

## ஐந்தாம் வகுப்பிலேயே முனைவர் பட்டம் தமிழக மாணவன் சாதனை



தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில் ஐந்தாம் வகுப்பு படிக்கும் மாணவர் ஒருவர், மதிப்புறு முனைவர் எனும் பட்டம் பெற்று பலரையும் ஆச்சரியப் படுத்தியுள்ளார்.

சேலம் மாவட்டம், வாழப்பாடியை அடுத்த முத்தம்பட்டியைச் சேர்ந்தவர் செல்வகுமார். தனியார் நிறுவன காவலாளியாக பணிபுரியும் இவருக்கு, மதுரம் ராஜ்குமார் எனும் மகன் உள்ளார். அரசுப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வரும் மதுரம் ராஜ்குமார், கவிதை படைக்கும் ஆற்றல் பெற்றவராக விளங்கி வருகிறார். இவர் நான்காம் வகுப்பிலேயே 55 தலைப்புகளின் கீழ் இரத்தினச்சுருக்கமாக நல்ல கவிதைகளைப் படைத்தார்.

ராஜ்குமாரின் கவிதைகளை சேகரித்த அவரது பெற்றோர், 'நல்விதையின் முதல் தளிர்' என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டனர். இந்நூலுக்கு பாராட்டுக்களும், பல்வேறு அமைப்பின் விருதுகளும் குவிந்தன. அதன் பின்னர், Universal Achievers Book of Records என்ற நிறுவனம் கவிதை எழுதுவதில் இதுவரை எந்த சிறுவனும் நிகழ்த்தாத சாதனையை வெளிப்படுத்த மதுரம் ராஜ்குமாருக்கு அழைப்பு விடுத்தது. அதனைத் தொடர்ந்து வாழப்பாடியில் நடந்த நிகழ்ச்சியில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 173 கவிதைகளை எழுதி உலக சாதனை படைத்தார் ராஜ்குமார். மாவட்ட வட்டார கல்வி அலுவலர்கள், கவிஞர்கள், இலக்கிய அமைப்பினர் என பலரும் ராஜ்குமாரை நேரில் சந்தித்து பாராட்டுத் தெரிவித்தனர்.

இந்நிலையில், சர்வதேச தமிழ்ப் பல்கலைக்கழகம் சென்னையில் நடைபெற்ற விழாவில் மதுரம் ராஜ்குமாருக்கு 'மதிப்புறு முனைவர் பட்டம்' வழங்கியது. ராஜ்குமாரின் தந்தை செல்வகுமார் "நான்காம் வகுப்பு படிக்கும் போது, பள்ளியில் நடைபெற்ற கவிதைப் போட்டிக்கு ஒரு கவிதை எழுதிக் கொடுக்குமாறு எனது மகன் மதுரம் ராஜ்குமார் கேட்டதற்கு, நீயே உன் மனதில் தோன்றியதை எழுதிக்கொடு என்றேன். இதுதான் இன்று என் மகன் உலக சாதனை படைத்த கவிஞராக மாறியதற்கு அடித்தளமாக அமைந்ததாகக் கருதுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாணவர் ராஜ்குமார் கூறுகையில், "எனது பெற்றோரும், ஆசிரியர்களும் கொடுத்த ஊக்கத்தால் எனது எண்ணத்தை கவிதையாக எழுதும் திறனைப் பெற்றேன். நான் கேட்கும் அத்தனை கேள்விகளுக்கும் எனது பெற்றோர் சளைக்காமல் பதிலைத் தேடித் தந்தனர். சிறுவயதிலேயே நான் கவிதை நூல் வெளியிட்டு உலக சாதனை படைப்பதற்கும், பல விருதுகளைப் பெறுவதற்கும், தமிழறிஞர்களைச் சந்திப்பதற்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த பெற்றோருக்கு என்னால் முடிந்த புகழைப் பெற்றுக் கொடுப்பேன். கவிதையில் மட்டுமன்றி கல்வியிலும் சாதிப்பதே என் எதிர்கால இலட்சியம்" என தெரிவித்துள்ளார்.

**24.06.2019 – பிறந்த தினம்**

## ரசிகர்களது இதயங்களில் வாழ்ந்துவரும் கவிஞர் கண்ணதாசன்



கவிஞர் கண்ணதாசன் அவர்களை அறியாதவர்கள் மிகச் சிலர்தான் இருக்க முடியும். இவரது இயற்பெயர் முத்தையா. 1927 ஜூன் 24ஆம் திகதியன்று தமிழ்நாடு சிவகங்கை மாவட்டம், சிறுகூடல்பட்டி கிராமத்தில் பிறந்தவர்.

கவிஞர் கண்ணதாசன் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களை எழுதியிருக்கிறார். நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளைப் படைத்திருக்கிறார். இதற்கும் மேலாக கட்டுரை, புதினம், பத்திரிகை, அரசியல், ஆன்மீகம், மேடைச் சொற்பொழி என பல துறைகளிலும் காலூன்றி வியாபித்திருந்தவர். பல திரைப்படங்களுக்கு கதை வசனம் எழுதியிருக்கிறார். இலக்கியப் படைப்புகளாக பல காப்பியங்களையும் சிறுகதைகளையும் உரை நூல்களையும் எழுதியிருக்கிறார். இப்படியாக பல்வகைத் திறமைகொண்ட படைப்பாளி இவர். இவரது சமயம் சார்ந்த படைப்பான 'அர்த்தமுள்ள இந்து மதம்' பலராலும் போற்றப்பட்ட நூலாகத் திகழ்கிறது.

முதலமைச்சராகவிருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் மீது கண்ணதாசன் குறைசொன்ன போதிலும், இவரது திறமையை மதித்து தமிழக அரசவைக் கவிஞராக நியமனம் செய்தவர் எம்.ஜி.ஆர்.

"மானிட இடத்தை ஆட்டி வைப்பேன், அவர் மாண்டுவிட்டால் அதைப் பாடி வைப்பேன். நான் நிரந்தரமானவன் அழிவதில்லை, எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" என்று கண்ணதாசன் பாடிவைத்தது போலவே, இவர் 1981 அக்டோபர் 17ஆம் திகதி மறைந்துவிட்டாலும், இன்றும் இவரது புகழுடல் வாழ்ந்துகொண்டிருக்கிறது.

# அமெரிக்காவில் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு

உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு என்றால் எங்கள் நினைவுக்கு வருபவர் நம்மவரான தனிநாயகம் அடிகளார் ஆவார். யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த தமிழ் பேரறிஞரான சேவியர் தனிநாயகம் அடிகள், பல தமிழ் அறிஞர்களுடன் இணைந்து 1964ஆம் ஆண்டு இந்தியாவின் புதுடில்லி நகரில் உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தை உருவாக்கினார். இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை உலகெங்கிலும் வாழும் தமிழ் ஆய்வாளர்களை ஒருங்கிணைத்து ஆராய்ச்சி மாநாடுகளை நடத்தும் நோக்கமாக இந்த மன்றம் தொடங்கப்பட்டது.

உலகத்தமிழ் ஆய்வு மன்றம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் இதுவரை ஒன்பது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன. பத்தாவது மாநாடு இம்மாதம் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதிவரை அமெரிக்க நாட்டிலுள்ள சிகாகோ நகரில் நடைபெறுகிறது. இந்த மாநாடு உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் துணையோடும், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை மற்றும் சிகாகோ தமிழ்ச்சங்கம் ஆகிய அமைப்புக்களின் ஒத்துழைப்போடும் இடம்பெறுகின்றது.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 32ஆவது ஆண்டு விழாவும் சிகாகோ தமிழ்ச் சங்கத்தின் 50 ஆவது ஆண்டுப் பொன்விழாவும் இணைந்ததாக இந்த மாநாடு இடம்பெறவுள்ளது. இவ்விரு நிகழ்வுகளும் ஜூலை 4ஆம் 5ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன. இதைத் தொடர்ந்து ஜூலை 6ஆம் 7ஆம் திகதிகளில் உலகத் தமிழாராய்ச்சி நிகழ்வுகளும் (ஜூலை மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதி வரையான நான்கு நாட்களுக்கு) சிகாகோ மாநிலத்திலுள்ள இலினொயிஸ் என்ற நகரத்தில் இடம்பெறுகின்றன. அமெரிக்காவிலிருந்தும் உலகின் ஏனைய பாகங்களிலிருந்தும் ஐயாயிரத்துக்கும் அதிகமான அறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகின் பல்வேறு நாடுகளில் பணியாற்றிவரும் தமிழறிஞர்களை ஒருங்கிணைத்து தமிழ் ஆராய்ச்சியை ஒருமுகப்படுத்தவும், வளப்படுத்தவும் தமிழறிஞர்கள் கூடி நடத்தும் மாநாடாக உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு விளங்குகின்றது. தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியால் முதலாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு மலேசிய நாட்டின் கோலாலம்பூர் நகரில் 1966ஆம் ஆண்டு இடம்பெற்றது. இரண்டாவது மாநாடு 1968ஆம் ஆண்டு சென்னையிலும், மூன்றாவது மாநாடு 1970ஆம் ஆண்டு பாரிஸிலும், நான்காவது மாநாடு 1974ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலும், ஐந்தாவது மாநாடு 1981ஆம் ஆண்டு மதுரையிலும், ஆறாவது மாநாடு 1987ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும், ஏழாவது மாநாடு 1989ஆம் ஆண்டு மொரீசியஸிலும் எட்டாவது மாநாடு 1995ஆம் ஆண்டு தஞ்சாவூரிலும், ஒன்பதாவது மாநாடு 2015ஆம் ஆண்டு கோலாலம்பூரிலும் நடத்தப்பட்டன.

## தமிழ்த்தாய் வாழ்த்து!

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றுபல வாகிடினும்
ஆரியம்போல் உலகவழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே!"

– மனோன்மணியம் பெ. சுந்தரனார்

## தெய்வீக இசையரங்கில் கலந்துகொள்வதற்கு அழைப்பு

நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தின்போது இளங்கலைஞர் மன்றம் நடத்திவரும் தெய்வீக இசையரங்கு வழமைபோல் இவ்வருடமும் இடம்பெறவிருக்கிறது.

இந்த தெய்வீக இசையரங்கில் பங்குகொள்ள விரும்பும் கலைஞர்கள் மற்றும் மன்றங்கள் விண்ணப்பிக்கும்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதற்குரிய விண்ணப்பப் படிவங்களை சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள இளங்கலைஞர் மன்ற அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இம்மாதம் (ஜூலை) 10ஆம் திகதிக்கு முன்னர் இளங்கலைஞர் மன்ற அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

இளங்கலைஞர் மன்றம் நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில், வருடந்தோறும் நல்லூர் கோயில் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் தெய்வீக இசையரங்கை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆய்வுக் கருத்தரங்கு

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம், வடமாகாண கலை மரபுகளை தற்காலத்துக்கு அமைய சீர்படுத்தும் வகையிலும், அபிவிருத்தி செய்யப்படுவதற்கும், குறைபாடு அம்சங்களை இனங்கண்டு அவற்றை முழுமை பெறச் செய்ய முயற்சிக்கும் நோக்கிலும் ஆய்வுக் கருத்தரங்கொன்றை விரைவில் நடத்தவிருக்கிறது.

மேற்படி ஆய்வுக் கருத்தரங்கில் சமர்ப்பிப்பதற்காக குறுகிய எழுத்தாக்கங்களை பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் கடந்த வாரம் கோரியிருக்கிறது.

தமிழர்களுக்கென தனித்துவமான ஆடல் வடிவத்தை உருவாக்குவது தொடர்பான முயற்சி, வடமாகாண அழகியல் கலைகளை சர்வதேச ரீதியில் கொண்டு செல்வது தொடர்பான கூட்டு முயற்சி, நவீன தொழில்நுட்பங்களின் ஊடான கலைவளர்ச்சி ஆரோக்கியமானதா? ஆரோக்கியமற்றதா? ஆரோக்கியமானதாயின் நவீன தொழில்நுட்பத்தின் ஊடாக கலைகள் தனது பாரம்பரியத்தை இழக்காது அடுத்த நிலைக்கு செல்வதன் வழிமுறைகள், பண்பாட்டு வளர்ச்சியில் கலைகளின் வகிபாகம், மனித நாகரிக வளர்ச்சியும் கலைகளும், சுதேசியக் கலைகளின் சமகாலப் போக்கு என்பன ஆய்வுக் கட்டுரையின் தலைப்புகளாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## மூன்று நூல்களின் வெளியீடு

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கலைச்செல்வி கதைகள், ஆடலிறை ஆக்கங்கள், முருகேச பண்டிதம் ஆகிய மூன்று நூல்களின் வெளியீட்டு விழா கடந்த மாதம் (ஜூன்) 25ஆம் திகதியன்று மாலை மருதனார் மடத்திலுள்ள வடஇலங்கை சங்கீத சபை மண்டபத்தில் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி அபிராமி பாலமுரளி தலைமையில் இடம்பெற்றது. வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன் (இப்போது வடமாகாண ஆளுநரின் செயலாளர்) பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

நமது நாட்டின் மூத்த எழுத்தாளரும், ஆடலிறை ஆக்கங்கள் நூலாசிரியருமான மயிலங்கூடலூர் பி.நடராசன் அவர்கள் நூல்களின் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

திரு.சி.ரமேஷ், திரு.எஸ்.ஸ்ரீகுமரன், திரு.அ.சிவஞானசீலன், திரு.ம.பா.மகாலிங்கசிவம், திருமதி ரஜினி நரேந்திரா, திரு ம.பா.பாலமுரளி ஆகியோரின் தொகுப்பில் மேற்படி மூன்று நூல்களும் வெளிவந்துள்ளன.

கலைச்செல்வி கதைகள் நூலில், திரு.சிவசரவணபவன் (சிற்பி) அவர்களால் 1958 முதல் 1966 வரையிலான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட கலைச்செல்வி சஞ்சிகையில் வெளிவந்த 198 சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. முருகேச பண்டிதம் நூலில் நாயன்மார்க்கட்டு முருகேசு பண்டிதர் அவர்களது ஆக்கங்கள் உள்ளடக்கம் பெற்றுள்ளன.

## மகாஜனாக் கல்லூரி நிறுவுனர் நினைவு தினம்



தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி நிறுவுனர் நினைவு தினமும், பரிசளிப்பு விழாவும் கல்லூரி அதிபர் திரு.மணிசேகரன் தலைமையில் கடந்த மாதம் (ஜூன்) 24ஆம் திகதியன்று நடைபெற்றது. வைத்தியநிபுணர் த.பேரானந்தராஜா தம்பதிகள் பிரதம விருந்தினராகவும், ஓய்வுநிலை ஆசிரியர் திரு.முருகையா அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர். செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் ஆசியுரை வழங்கினார். கனடா குரு அரவிந்தன் அவர்கள் மேற்படி வைபவத்தில் கலந்துகொண்டு நினைவுப் பேருரையாற்றினார்.

## இணுவிலில் சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு இடையூறு

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஏற்பாட்டில், இணுவில் மக்லியோட் வைத்தியசாலை நிலப்பரப்பின் ஒருபகுதியில் சிறுவர் வைத்தியசாலை பிரிவை அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், சிலரின் இடையூறு காரணமாக வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இணுவில் மக்லியோட் வைத்தியசாலைக்கு பொறுப்பாகவிருந்த தென்னிந்திய திருச்சபையிடம் நிலம் பெறப்பட்டு, சுற்றுமதில் அமைக்கும் பணிகள் நிறைவுபெற்ற நிலையில், சுகாதார அமைச்சு இங்கு சிறுவர் வைத்தியசாலையை நிறுவுவதற்கு ஆயத்தமாகிய வேளையில் இடையூறு ஏற்பட்டுள்ளது. அதாவது தென்னிந்திய திருச்சபையோடு முரண்பட்டுள்ள பிறிதொரு கிறிஸ்தவ அமைப்பு சிறுவர் வைத்தியசாலை கட்டட வேலைகளை தடைசெய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக தெரியவருகிறது. இது தொடர்பான செய்திகள் பல ஊடகங்களிலும் வெளியாகி வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் சிறுவர்களின் மருத்துவ சிகிச்சையை மேம்படுத்தும் வகையில் யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைந்ததாக பலவித வசதிகளுடன் தனியானதொரு கட்டடத்தில் சிறுவர் வைத்திய பிரிவு இயங்குவது தடைப்படுமானால், வடபகுதி பொதுமக்களே பாதிக்கப்படுவார்கள் என பலரும் விசனம் தெரிவித்து வருகின்றனர்.

## சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபம் புனரமைப்பு

இந்து சமய விவகார அமைச்சு மற்றும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிழக்கிலங்கை காரைதீவு பிரதேசத்தில் அமைந்துள்ள முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபம், சுவாமி விபுலானந்தர் அவதரித்த பூர்வீக வாசஸ்தலம் என்பன புனரமைப்புச் செய்யப்பட்டன.

இவற்றை பொதுமக்கள் பாவனை மற்றும் பார்வையிடலுக்காக மீளக் கையளிக்கும் நிகழ்வு கடந்த மாதம் (ஜூன்) 27ஆம் திகதியன்று காரைதீவில் இடம்பெற்றது. அமைச்சர் கௌரவ மனோ கணேசன் அவர்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு.அ.உமாமகேஸ்வரன் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரமுகர்கள் பலர் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

செய்தியின் பின்னணியில்

## யாழ். பல்கலைக்கழகத்தில் இந்து கற்கை நெறிகளுக்கு தனியான பீடம்

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் கடந்த மாதம் (ஜூன்) 6ஆம் திகதியன்று மற்றுமொரு அத்தியாயம் ஆரம்பமாகியுள்ளது. இந்து கற்கை நெறிகளுக்காக தனியானதொரு பீடம் உதயமாயிருப்பதே அந்த வரலாற்றுப் பதிவாகும். இந்து நாகரிகம், சமஸ்கிருதம், சைவசித்தாந்தம் ஆகிய மூன்று துறைகளும் இந்தப் பீடத்தின்கீழ் தனிப்பிரிவாக இயற்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. 1974ஆம் ஆண்டு யாழ். பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சைவசமய விடயங்கள் தொடர்பாக தனிப்பீடம் அமைக்கப்படவேண்டும் என பலரும் குரல்கொடுத்து வந்தனர். சேர் பொன்.இராமநாதன் அவர்களின் பெரும் சொத்தாகிய திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி பல்கலைக்கழகமாக மாறியபோது, அவரது இலட்சியங்கள் இவ்வளாகத்தில் பேணிப் பாதுகாக்கப்படும் என அன்றைய பிரதமர் அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பல்கலைக்கழக திறப்புவிழாவில் உறுதியளித்திருந்தார். எனினும் நாலரை தசாப்தங்களுக்குப் பின்னர், இந்து பீடம் அமைக்கும் முயற்சி நிறைவேறியிருக்கிறது.

யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் முதலாவது (பதில்) பீடாதிபதியாக திருமதி சுகந்தினி சிறிமுரளிதரன் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது தலைமையிலேயே 2019 ஜூன் 6ஆம் திகதியன்று அங்குரார்ப்பண நிகழ்வுகள் இடம்பெற்றன. அன்றைய சிறப்பு அம்சங்களாக நந்திக்கொடி ஏற்றல், மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம் என்பனவற்றுடன் ஆன்மீகப் பெரியவர்களது ஆசியுரைகள், வாழ்த்துரைகள், கல்விசார் அறிஞர்களது சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன. யாழ்.இந்திய துணைத்தூதுவர் கௌரவ என்.பாலச்சந்திரன் அவர்கள் பல இலட்சம் ரூபா பெறுமதியான நூல்களை நன்கொடையாக வழங்கியிருந்தார்.

யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடம் எதிர்காலத்தில் காத்திரமான பணிகளை முன்னெடுத்துச் செல்வதாக இயங்கும் என எதிர்பார்க்கலாம்.

## மன்னாரில் மாதிரிக் கிராமம்

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராமத்தில் 'குறிஞ்சி நகர்' என்ற பெயரில் மாதிரிக் கிராமம் அமைக்கப் பட்டுள்ளது. 211ஆவது மாதிரிக் கிராமமான இதனை அமைச்சர் கௌரவ சஜித் பிரேமதாச அவர்கள் இம்மாதம் முதலாம் திகதியன்று திறந்து வைத்தார்.

## திருக்கேதீஸ்வர நுழைவாயில் அலங்கார வளைவு அமைப்பதற்கு மீண்டும் தடை

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்குச் செல்லும் வீதியிலுள்ள மாந்தை சந்தியில் நுழைவாயில் அலங்கார வளைவு அமைப்பதில் தொடர்ந்தும் இடையூறு ஏற்பட்டுவருகின்றது. கடந்த சிவராத்திரி தினத்தை முன்னிட்டு, அங்கு அலங்கார வளைவு அமைக்கப்பட்டபோது, அவ்விடத்திற்கு வந்த ஒருசிலரால் வளைவு உடைக்கப்பட்டதன் காரணமாக, பெரும் சர்ச்சை ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகத்தால் மன்னார் பிரதேச சபையிடம் அதேயிடத்தில் அலங்கார வளைவு அமைப்பதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது. மன்னார் பிரதேச சபையும் அதற்கான அனுமதியை வழங்கியிருந்தது. இதற்கான நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், இது தொடர்பான அனுமதியை இடைநிறுத்துவதாக பிரதேச சபை அறிவித்துள்ளது. இந்தச் செய்தி ஆலய நிர்வாகத்திற்கும், மன்னார் மாவட்ட இந்து சமூகத்திற்கும் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியிருக்கிறது.

இதுதொடர்பாக மன்னார் பிரதேச சபை தவிசாளர், திருக்கேதீஸ்வரம் ஆலய திருப்பணிச் சபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் "மன்னார் பிரதேச சபை ஜூன் 14ஆம் திகதியன்று அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் பல்வேறு தரப்பினரிடமிருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. இதனைக் கருத்தில் கொண்டு, எமது பிரதேச சபை எல்லைக்குள் சமய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடலை ஏற்படுத்தி சுமுகமாக தீர்வை எட்டும்வரை என்னால் வழங்கப்பட்ட அனுமதி தற்காலிகமாக இடைநிறுத்தப்படுகிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

## மண்டைதீவில் சுற்றுலா மையம்

யாழ்.மண்டைதீவு கடற்கரை பகுதியில் சுற்றுலா மையம் அமைக்கப்பட்டுள்ளது. வேலணை பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை என்பனவற்றின் ஒழுங்கமைப்புடன் சுற்றுலாத்துறை அமைச்சின் 7.5கோடி நிதியுதவியில் நிறுவப்பட்டுள்ள சுற்றுலா மையம் இப்போது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

## கவிதை நூல் வெளியீடு

புலம்பெயர் படைப்பாளி திரு.கனகசபாபதி சக்திதாசன் அவர்களின் 'தொலைத்த கனவுகளும் தொலையாத வாழ்க்கையும்' கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதியன்று யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது. பேராசிரியர் க.தேவராஜா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

## மிருதங்க அரங்கேற்றம்




பிரபல மிருதங்க வித்துவான் திரு. சி. துரைராசா அவர்களின் மாணவியான செல்வி திலக்ஷனா ரவீந்திரனின் மிருதங்க அரங்கேற்றம் கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதியன்று மாலை கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நல்லூர் ஸ்ரீதுர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெற்றது.

செல்வி திலக்ஷனா யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் க.பொ.த (உயர்தரம்) விஞ்ஞானப் பிரிவில் பயிலும் மாணவியாவார்.

## தந்தை செல்வா கலையரங்கம் திறந்து வைக்கப்பட்டது

தந்தை செல்வா நினைவாக யாழ்.மத்திய கல்லூரியில் கலையரங்கமொன்று நிறுவப்பட்டுள்ளது. தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்டுள்ள மேற்படி கலையரங்கம் இம்மாதம் முதலாம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது.

## அமரர் கார்த்திகேசன் நூற்றாண்டு விழா




இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபக அங்கத்தவரும், சிறந்த ஆங்கிலக் கல்விமானும், யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபருமான அமரர் மு.கார்த்திகேசன் அவர்களது பிறந்தநாள் நூற்றாண்டு விழா இம்மாதம் கொண்டாடப்பட இருக்கிறது. இதற்கான ஏற்பாடு அன்னாரின் குடும்பத்தினராலும், நண்பர்களது குடும்பத்தினராலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## புதிய நியமனங்கள்

வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராக திரு.எஸ்.சத்தியசீலன் இம்மாதம் முதலாம் திகதியன்று பதவியேற்றுள்ளார். இதுவரை வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளராகப் பணியாற்றிய திரு.இ.இளங்கோவன் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக நியமனம் பெற்றுள்ளார். இவர்கள் இருவரும் யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## கதிர்காமக் கந்தனின் வருடாந்தப் பெருவிழா



தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட கதிர்காமக் கந்தனின் வருடாந்த உற்சவம் இம்மாதம் (ஜுலை) 3ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 17ஆம் திகதி நிகழவிருக்கும் தீர்த்தோற்சவத்துடன் உற்சவம் நிறைவுபெறும்.

இலங்கையின் புகழ்பூத்த புனித பாதயாத்திரை தலங்களுள் கதிர்காமம் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இந்து, பௌத்த மக்களின் வழிபாட்டுக்குரிய தலமாகவும் கதிர்காமம் விளங்குகின்றது. மாணிக்ககங்கை தீர்த்தக் கரையில் எழுந்தருளி அருள்பாலிக்கும் முருகப்பெருமானை வழிபாடு செய்து திருவருளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பெருமளவிலான தமிழ், சிங்கள மக்கள் இங்கு வருகை தருவது குறிப்பிடத்தக்க சிறப்பாகும்.

## பலாலி விமான நிலையம் விஸ்தரிக்கப்படும்

பலாலி விமான நிலையத்தின் ஓடுபாதையை சீரமைப்பதுடன், அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொண்டு பிராந்திய விமான நிலையமாக தரமுயர்த்தும் செயற்பாடுகள் இம்மாதத்தின் (ஜுலை) முதல் வாரத்தில் ஆரம்பமாகவிருக்கிறது.

கடந்த மாதத்தின் (ஜுன்) இறுதி வாரத்தில் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் பிரதி அமைச்சர் அசோக் அபேசிங்க பாராளுமன்றத்தில் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

19.5 பில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. பெரும்பாலும் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் இந்த அபிவிருத்திப் பணிகள் நிறைவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பலாலி விமான நிலையத்தை காலப்போக்கில் சர்வதேச விமான நிலையமாக தரமுயர்த்தும் செயற்பாடுகளும் இடம்பெறலாம் என ஆய்வாளர்களால் எதிர்வு கூறப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா– யாழ்ப்பாணம் புகையிரதப் பாதையில் ஆறு வருடங்களில் 42 பேர் உயிரிழப்பு

வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான புகையிரத பாதையில் ஏற்பட்ட விபத்து சம்பவங்கள் காரணமாக 2013ஆம் ஆண்டு முதல் 2019 ஜுன் மாதம் வரையிலான காலப்பகுதியில் 42பேர் உயிரிழந்திருக்கிறார்கள். கடந்த வாரம் பாராளுமன்றத்தில் பேசிய திரு.எஸ்.ஸ்ரீதரன் (பாராளுமன்ற உறுப்பினர்) அவர்கள் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வவுனியா வரை மட்டுப்படுத்தப்பட்டிருந்த வடபகுதி புகையிரத சேவை கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை என பகுதி பகுதியாக நீடிக்கப்பட்டு வந்தது. அந்தவகையில் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் 46 விபத்துச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொடரில் இறுதியாக கடந்த ஜுன் மாதத்தின் பிற்பகுதியில் இராணுவ வாகனமொன்று ரயிலுடன் மோதியதில் ஆறு இராணுவ வீரர்கள் உயிரிழந்திருக்கிறார்கள்.

உயிரிழப்புக்கு காரணமான விபத்துகள் பெரும்பாலும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளிலேயே நிகழ்ந்திருப்பதாக தெரியவருகிறது.


### சிவபூமி
### மாதாந்த செய்திப் பத்திரிகை
### சந்தா விபரம்

சிவபூமி - மாதாந்த செய்திப் பத்திரிகைக்கு வருடாந்த சந்தா செலுத்துவதன் மூலம் கிரமமாக பத்திரிகையை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலமாக ஒவ்வொரு மாதமும் பத்திரிகை அனுப்பிவைக்கப்படும்.

**சந்தாப் பணத்தை பின்வரும் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்யலாம்.**

**Hatton National Bank - Chunnakam**
**Sivapoomi Trust - 117020080261**

சந்தாப் பணத்தை வங்கியில் வைப்புச் செய்த பின்னர் அது தொடர்பாக சிவபூமி அறக்கட்டளை அலுவலகத்திற்கு தெரிவிக்கவும்.

வருடாந்த சந்தா (தபாற் செலவு உட்பட)


உள்நாடு : ரூபா 600/=

வெளிநாடு : 25$ (அமெரிக்க டொலர்)

தொடர்புகளுக்கு : சிவபூமி அறக்கட்டளை
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.


தொலைபேசி இல : 021 222 7938

## அமரர் க.சிவாஜி ஆத்மசாந்திப் பிரார்த்தனை




சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி முன்னாள் அதிபர் திரு.கந்தசாமி சிவாஜி அவர்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனை கடந்த மாதம் (ஜூன்) 27 ஆம் திகதியன்று கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடைபெற்றபோது அன்னாரின் நிகழ்வாக 'சத்ரபதி' எனும் சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

## கலைச்செல்வி கதைகள் நூல் வெளியீடு




வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் அண்மையில் வெளியிடப்பட்ட மூன்று நூல்களுள் ஒன்று கலைச்செல்வி கதைகள். ஓய்வுநிலை அதிபரும், மூத்த எழுத்தாளருமான அமரர் சிவசரவணபவன் (சிற்பி) அவர்களால் 1958 முதல் 1966 வரையிலான காலப்பகுதியில் வெளியிடப்பட்ட 'கலைச்செல்வி' சஞ்சிகையில் பிரசுரமான 198 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

## வெவ்வினையை வேரறுக்கும் விநாயகர்





கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் பழைய மாணவன் எஸ்.துசாந்தன் அவர்களின் கைவண்ணம் இது.

## ஓராண்டு நிறைவில் நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை



திருவாசக அரண்மனையில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் அகத்திய முனிவர் பரிவாரக் கோயில்







புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் மணிக்கோபுரம்

Registered in the Dept.of Post of Sri Lanka Under No. QD/29/News/2019

# நாவற்குழி சிவபூமி அரும்பொருட் காட்சியக கட்டட நிர்மாணப் பணி





நாவற்குழியில் அமைக்கப்படவிருக்கும் மூன்று மாடிகளைக் கொண்ட அரும்பொருட் காட்சியகத்தின் கட்டடவேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இந்த அரும்பொருட் காட்சியகத்தில் தமிழர்களது பாரம்பரிய பயன்பாட்டுப் பொருட்கள் மற்றும் ஈழத்து கலைஞர்கள், அறிஞர்கள், பாடசாலை ஸ்தாபகர்கள், அதிபர்கள் உட்பட சமய பொதுநல சேவையாளர்களின் புகைப்படங்கள், புராதன ஆவணங்கள் காட்சிப்படுத்தப்படவிருக்கின்றன. விரைவில் திறக்கப்படவுள்ள சிவபூமி அரும்பொருட் காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்படுவதற்கான பாரம்பரிய பொருட்கள், சான்றோர்களின் புகைப்படங்கள், பழைய ஆவணங்கள் என்பனவற்றை வழங்கி உதவுமாறு சிவபூமி அறக்கட்டளை அன்பான வேண்டுகோளை விடுத்துள்ளது.

## இதய அஞ்சலி



### திருமதி.புனிதவதியார் மகாதேவா

சிவபூமி அறக்கட்டளையின்
வளர்ச்சிக்கு பெரிதும் ஒத்துழைப்பும்
உதவியும் வழங்கிய அன்பர்
லண்டன்வாழ் தொழிலதிபர்
திரு.மகாதேவா ஜெயசீலன்
அவர்களின் அன்புத் தாயார் திருமதி
புனிதவதியார் மகாதேவா அவர்கள்
திருகோணமலையில் காலமானார்.
இவரது மறைவையிட்டு சிவபூமி
அறக்கட்டளை அன்னாரின் குடும்பத்
தினருக்கு ஆழ்ந்த அநுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றது.

## அமரர் வி.தர்மலிங்கம் அவர்களுக்கு உருவச் சிலை



மானிப்பாய் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற
உறுப்பினரும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயா
கல்லூரியின் முன்னாள்
முகாமையாளரும் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி
தேவஸ்தான பரம்பரை தர்மகர்த்தாவுமான
அமரர் வி.தர்மலிங்கம்
அவர்களின் ஜெனன நூற்றாண்டையொட்டி
கந்தரோடை கிராமத்தில்
அன்னாரது
உருவச்சிலையொன்று
அமைக்கப்பட்டுள்ளது.
இது விரைவில் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

9789557420004
ISBN 978-955-7420-00-4

இந்தப் பத்திரிகை கோண்டாவில் சிவபூமி தொழிற்பயிற்சிப் பாடசாலையில் அச்சிடப்பட்டு சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டது. (01 ஜூலை 2019)